திருவள்ளுவர் 2041.  மகாத்மா காந்தி வாழ்க.  தனிப்பிரதி விலை அணா ஒன்று

VP 118
ERODE




[வாரப்பதிப்பு.]
ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

| | ரூ. அ. |
|---|---|
| வெளி நாட்டிற்கு சந்தா ... | 4—0 |
| விளம்பரம் அங்குலம் 1-க்கு ... | 0—8 |

அக்ஷய-ஞு ஆவணி-மீ 20-உ (5—9—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 19.

## உண்மையான கதர்

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட. உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்திகதராலயம், திருப்பூர்.

## கதர் கதர் கதர்

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற
### சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்தகதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

1916-ஞு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாரிகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

# இந்தியர் கஷ்டநிவாரண பாங்கு "லிமிடெட்" கோயமுத்தூர்.

காப்பு திரவியம்—ரூ. 2,706.
மூல திரவியம் — ரூ. 5,00,000.
வெளிவிடப்பட்டது —ரூ. 69,100,
வசூலிக்கப்பட்டது —ரூ. 43,890.
டிபாசிட்டுகள் ரூ. 62,580-1-0.

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்செட் டிபாசிட்டு
இரண்டு வருஷ, கேடுவு வட்டி
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0
இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு.
ஒரு வருஷ கேடுவு, வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 6—12—0
இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் கொடுக்கப்படும்.

ஷை பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-16-உ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணாவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளினுலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினுலும் முயற்சியினுலும், பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப் பட்டிருப்பதும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளது வரை யாதொரு போக்குவரத்தி யில்லாமலும் இருப்பதி லிருந்து மானேஜிங் டைரக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப் பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாஸிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்திலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி.ராமச்சந்திர செட்டி,
31—5—26. மானேஜிங் டைரக்டர்.


ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.
உலகப் பிரசித்திபெற்ற

## மஹா சந்தனாதி தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை ... ஒரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்

## சாலாமிசிரி லே

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு ... துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, ப... சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்... ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, த... ம், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல தி...

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமா... இனமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம்
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, ...



## ஆனந்த குணபோதினி

ஒரு நூதன உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை
பிரசித்த அநுபவஞான சாஸ்திரி இதன் ஆசிரியராய் விளங்குகிறர்.

இத்தகைய நவீன பத்திரிகை இதுவரை வெளிவந்ததில்லை. இது தமிழ் அறிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் உன்னதம் வாய்ந்தது. சித்திரப்படங்களுடன் திகழ்வது. கல்விச் செல்வம், பொருட்செல்வம் பெருகி இன்பம் ஓங்குதற்குரிய வியாசங்களால் ஒளிர்வது. அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது. நன்னடக்கையும், லௌகீக யுக்தியும், பாஷை ஞானமும், தேசாபிமானமும், ஈசுவர பக்தியும், ஆழ்ந்த யோசனையையும் உண்டாக்கக் கூடியது. எல்லா மதஸ்தர்களுக்கும், எல்லா ஜாதியார்களுக்கும் ஏற்றதாய் நல்ல விஷயங்கள் இருக்கப் பெற்றது. சொல் நயம் மிகுந்து தமிழ் உலகமெல்லாம் ஜொலிக்கும் படியாயிருப்பது "ஆனந்த குணபோதனி"தான். ஆடவர், மகளிர், பெரியோர், சிறியோர், எவர் கையிலும் இப்பத்திரிகையை இனிக் காணலாம்.

இதில் "ஆனந்த தரிசனம்" "பழமொழிக் குறிப்புகள்" "பத்திரிகா சாரம்" "பெண்கள் பக்கம்" "பிரபஞ்ச தரிசனம்" "விகடப் பிரதாபன்" "சென்ற மாதம்" என்ற தலைப் பெயர்களின் கீழ்வரும் ஒவ்வொரு விஷயங்களும் சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய அலங்கார வசனமழையாய் விளங்கும். இப்பத்திரிகையே எவ்விஷயத்திலும் வெகு சிறந்ததென்பதை தங்களுடைய அநுபவத்தில் தாங்களே அறிந்து கொள்ளலாம். ஆனந்த குணபோதினியின் சொற்ப சந்தாவை உற்று நோக்குங்கள். வருஷச் சந்தா ரூபாய் ஒன்றே (ரூ-1) இன்றே எழுதுங்கள், உடனே சேருங்கள்.

தி இராஜகோபால் முதலியார்,
புரோப்ரைட்டர், "ஆனந்த குணபோதினி" ஆபீஸ்,
302, தங்கசாலைவீதி, சென்னை.



"ஆனந்த விகடன்"

இதில் பல அருமையானதும் விடாநகைப்பைத் தருவதுமான விகடங்களும் விகடத்தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய அநேகப் பாடல்களும், விகடக் கதைகளும், ஞானந்தரும் வியாசங்களும் பலவகை குறிப்புகளும், "முத்தாம்பாள் அல்லது மோகனவடிவு" என்னும் தொடர்ப்பு நாவலும், பஞ்சாங்கமும் அடங்கியுள்ளது. இதை ஒரு தரம் வாசித்தவர்கள் மறுபடியும் வாசிக்காதிருக்கமாட்டார்கள்.

வருட சந்தா ரூ. 2, வெளிநாட்டிற்கு ரூ. 2-8-0
1 அணா ஸ்டாம்பு அனுப்ப மாதிரி இனும்.
[மாத சஞ்சிகை] ஆனந்த விகடன் ஆபீஸ்.
சௌகார் பேட் போஸ்ட், ஜி. டி- மதரூஸ்.





பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனும்.

ஸன் கம்பேனி, தஞ்சாவூர்.

## லாலாஜியும் சுயராஜ்யக் கட்சியும்.

ஒத்துழையாமையையும், மகாத்மா காந்தியையும், ஒழிப்பதற்கென்றும் நமது தமிழ்நாட்டுப்பார்ப்பனர்கள் பல சூழ்ச்சிகள் செய்தும் பயன் படாமல் போனதுகண்டு கடைசியாக வங்கத்து வீரரும் ஸ்தோத்திரப் பிரியருமான ஸ்ரீமான் தாஸ் அவர்களைப்பிடித்து அவருக்கு பட்டாபிஷேகம் செய்வதாய் ஏமாற்றி அவரை விபூஷணராக்கி அவரைக் கொண்டு தங்கள் எண்ணிய எண்ணத்தை முடித்துக் கொண்டார்கள். அது சமயம் தங்களுக்கென்று ஒரு கக்ஷியிருப்பதாயும் அதற்கு பொது ஜனங்கள் ஏமாறத்தக்க வண்ணம் பஞ்சாப், கிலாபத்து, சுயராஜ்யக் கக்ஷி என்று பெயருமிட்டு ஒரு பொய் மாயமானை சிருட்டித்தார்கள். பெயர் நீளமாயிருப்பதாக பலர் பரிகாசம் செய்யவே அதை சுயராஜ்யக் கட்சி என்று சுருக்கிக் கொண்டார்கள். இக் கட்சியின் உற்பத்தியையும் வளர்ச்சியையும் மனப்பூர்வமாய் அறிந்தும், தன் காலிலேயே நிற்கக்கூடிய சக்தி இல்லாத சில தலைவர்கள் என்போர்களும் தேசியப் பத்திரிகை என்பதுகளும் அப்பொய்மானை எதிர்க்க சக்தியில்லாதவர்களாகி சமயம் வரும்போது நாமும் ஒரு கல்லைத் தூக்கிப் போடலாம் என்கிற எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு வெளியில் சுயராஜ்யக் கட்சியை ஆதரிப்பவர்கள் போலவே நடித்து தங்கள் நிலையைக் காப்பாற்றி வந்தார்கள். இதன் பலனாய் இப் பொய்மானை எதிர்க்க யாராவது வெளிக் கிளம்புவது என்றாலே பயப்பட வேண்டியதும் ராஜீய உலகத்தில் உயிருக்குத் துணிய வேண்டியதும் மிகவும் அவசியமாயிருந்து விட்டதால் வெகு சிலர் கூட வெளிக் கிளம்ப முடியாமல் போய் விட்டது. இந்த நிலைமையானது நமது பார்ப்பனர்களுக்கு பாமர ஜனங்களை வஞ்சித்து பதவிகள் பெறவும், தங்கள் ஆதிக்கத்தை நிலை நிருத்திக் கொள்ள அதுகளை உபயோகித்துக் கொள்ளவும், வெகு அனுகூலமாய்ப்போய்விட்டது. இதைக்கண்டு இரண்டொருவர் அரசியல் உலகத்தையே துறந்து தங்கள் சொந்தத்திற்கு ஏற்படக்கூடிய பல துன்பங்களுக்கும் கஷ்டங்களுக்கும் துணிந்தும், அரசியல் உலகில் கடுகத்தனை இடம் இல்லாமல் போனாலும் உண்மைத் தொண்டுக்கும், சத்தியத்திற்கும், யோக்கியதை இருக்கிறதா, இல்லையா, என்பதை ஒரு கை பார்த்தே தீருவோம் என்று இறங்கி இப்பார்ப்பனர்களின் சூட்சிக்கும், தந்திரத்திற்கும், பழிக்கும், விஷமப் பிரசாரத்திற்கு கூலி கொடுத்து ஆள்களை விட்டு திட்டவும் வைது எழுதவும், செய்வித்த கொடுமைகளுக்கெல்லாம் பயந்து ஓடாமல் முகம் கொடுத்ததின் பலனாகவும் இப்பொய் மானை பாமர ஜனங்கள் கொஞ்சமாவது உணரவும், இப்பொய் மானை நம்பி ஏமாந்த தலைவர்கள் கண் விழிக்கவும், தன் காலில் நிற்க முடியாமல் தவித்துக்கொண்டு இரண்டும் கெட்டானாய் இருந்தவர்கள் உறுதியுடன் நிற்கவும் முடிந்தது. ஆனால் லாலா லஜபதிராய் போன்ற வீரர்கள் எல்லாம் இப்பொய்மானால் ஏமாற்றப் பட்டார்கள் என்றால் மற்ற யார் ஏமாந்ததைப் பற்றி நாம் குற்றம் சொல்ல முடியும். பல அரசியல் தலைவர்கள் ஏமாறவில்லையானாலும் அது சமயம் வேறுமார்க்கமில்லாமல் தெரிந்தே கட்டுப் பட்டிருக்க வேண்டியிருந்ததையும் நாம் ஒப்புக் கொண்டு தானாகவேண்டும்.

இந்த நிலைமையில் இன்னமும் சுயராஜ்யக் கட்சி என்கிற பொய்மான் சில புது ஆசாமிகளை ஏமாற்றிக் கொண்டும் தான் வருகிறது.

ஆதலால் அதனிடத்தில் உள்ள மாய்கையில் பல சுய நலக்காரர்கள் மயங்குவதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் பாமர ஜனங்கள் அதன் மாய்கையில் விழ இடங்கொடுக்கக் கூடாதென்றே ஆசைப் படுகிறோம்.

சுயராஜ்யக் கட்சி என்பது எந்தவகையில் நாட்டிற்கு அனுகூலமான கொள்கையை உடைத்தாயிருக்கிறது.

எவ்வித தலைவர்களை அது உடைத்தாயிருக்கிறது. அல்லது அதனிடத்தில் எவ்வித கண்ணியமிருக்கிறது. அல்லது நமது நாட்டில் எந்தக் கூட்டத்தாரிடத்தில் அதற்கு மதிப்பு இருக்கிறது. இவைகளையெல்லாம் பாமர ஜனங்கள் அறியும்படி. யோக்கியமான பத்திரிகைகள் என்று சொல்லப்படுவதும் உண்மையான அரசியல் தலைவர்கள் என்போர்களும் உண்மைத் தொண்டர்களும் தங்கள் மனச்சாட்சி சொல்லுகிறபடியாவது வெளியிட்டிருப்பார்களானால் ஒத்துழையாமையும் காந்தியடிகளும் ஒடுங்கியிருக்க முடியுமா. காலநதியில் ஒடுங்கியிருந்தாலும் இன்னமும் தலையெடுக்காமலாவது இருந்திருக்க முடியுமா, என்றுதான் நாம் கேட்கிறோம்.

ஒத்துழையாமை ஒடுங்கினதற்கும் மகாத்மா விலகிக் கொண்டதற்கும் நமது பார்ப்பனர்களின் சூட்சியே காரணமானாலும், அச் சூட்சிகளுக்கு ஆக்கமளித்த பார்ப்பனரல்லாத தேசிய பத்திரிகைகளும் தேசியத் தலைவர்களும் தேசியத் தொண்டர்களுமே இதன் பெரும் பாகத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியவர்கள். ஒரு வீட்டில் உள்ள சொத்துக்கள் களவு போனதற்கு களவாளியே காரணம். ஆனாலும் கதவைத் திறந்து வைத்து விட்டவர்களே அதிக காரணஸ்தர்கள் ஆவார்கள். ஆரம்பத்தில் கதறினோம், எல்லோரும் இதற்கு உடந்தையாய் இருக்கிறார்களே அரியமலா, அல்லது வேண்டுமென்றோ, அல்லது நாம் மாத்திரம்தான் பைத்தியக் காரரா என்று கூட எழுதினோம் நமது எதிரிகளும், ஒரே ஒரு பைத்தியக்காரன்தான் ஈரோட்டில் இருக்கிறான் என்று கூட எழுதினார்கள். இப்பொழுது நாள் ஆக ஆக அதிக பயித்தியக் காரர்கள் ஏற்பட்டுக்கொண்டு வருகிறார்கள். நாம் பயித்தியக் காரரான வெகு நாள் பொருத்துதான் மகாத்மாவும் பயித்தியக் காரர் ஆனார். பிறகு அநேகம் பயித்தியக்காரர்கள் ஆனார்கள். கடைசியாக லாலா லஜபதிராயும் நம்மைப்போலவே பயித்தியக்காரராகிவிட்டார். இப்போது நமது பார்ப்பனர்கள் அவரை பிதவாதி என்றும் பொறுத்தமற்ற நடவடிக்கைக்காரர் என்றும், வெள்ளைக்காரரிடம் சபாஷ் பட்டம் வாங்கிவிட்டார் என்றும் சொல்வதோடு லாலா அவர்கள் நிர்மாண வேலை செய்வதாய் ஒப்புக்கொண்டு என்னையும் நம்பச் செய்து தங்கள் கக்ஷியில் சேர்த்துக்கொண்டபிறகு (கொள்கை) நிர்மாண வேலையைப் பற்றி ஒன்றும் செய்யவில்லை என்றுகேட்டால் அதற்கு மறுமொழி, தாங்கள் செய்யாமல் தேசத்தாரை ஏமாற்றிவிட்டதற்கு வெட்கப்படாமல் நீங்கள் என்ன செய்தீர்கள் என்று திருப்பிக் கேட்டிருக்கிறார்கள். இன்னும் லாலாஜி அவர்களை லாலாஜி சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து தனக்காக செய்து கொள்ளவேண்டிய அவசியம் இருந்ததாகவும் இப்போது அது தீர்ந்தவுடன் அதை விட்டு விலகிவிட்டதாகவும் ஒரு கெட்ட எண்ணமும் கற்பிக்கப்படுகிறது. மற்றும் பல கடுமொழிகளும் உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. இது எவ்வளவு கொடுமை என்பதை வாசகர்கள் யோசிக்கவேண்டும்.

### தலைவர்கள்.

முதலாவதாக இது பெயருக்கு மாத்திரம் பண்டிட் மோதிலால் நேரு என்கிற ஒரு மத்திய மாகாணப் பார்ப்பனரால் எழுதப்பட்டது என்று வெளியில் தெரிவதாயிருந்தாலும், உண்மையில் அது தமிழ்நாட்டுப் பார்ப்பனர் ஒருவரால் எழுதி பண்டிதர் பேரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவேண்டும் என்றே எண்ணுகிறோம். எப்படி என்றால் கவர்னர் போன்றவர்களுக்கு ஏதாவது உபசாரப் பத்திரமோ, விண்ணப்பமோ, கொடுத்தால் அதற்கு பதில் கவர்னரோ, அல்லது கவர்னர் பேராலோ கொடுக்கப்பட்டாலும் அதை தயார் செய்வது இலாக்கா காரியதரிசிதான்; அதுபோல் இதை எழுதியவர் இலாக்கா காரியதரிசியாகிய ஸ்ரீமான் எ. ரெங்கசாமி அய்யங்காராகத்தான் இருக்கவேண்டும். அது எப்படியிருந்தபோதிலும் இப்பார்ப்பனர்கள் அபிப்பிராயத்திற்கு யாராவது மாறுபட்டால் அவர்கள் வெள்ளைக்காரரின் ஆள்,—சுயநலக்காரர்,—பொம்மை —தத்துவம் உணராதவர், துரோகி என்று சொல்லிவிடுகிறார்கள். லாலாஜி அவர்கள் யோக்கியதையையும் இவ்விரு பார்ப்பனர்கள் யோக்கியதையையும் நினைத்துப்பார்த்தால் யார் தேச பக்தர்கள் யார் சுய ஜாதி பக்தர்கள், யார் சுயநல பக்தர்கள் என்பது விளங்காமல் போகாது. மத்திய மாகாண பார்ப்பனரான பண்டிதர் அவர்கள் பாமர ஜனங்களை ஏமாற்றி மாதம் 10, 20-ஆயிரம் ரூபாய் கொள்ளை அடித்துக் கொண்டும் ராஜ போகம் அனுபவித்துக்கொண்டு தேசபக்தராயிருந்த காலத்தில் லாலாஜி தூக்கிச் செல்லப்பட்டதும், அன்னிய நாடுகளில் சாப்பாட்டுக்குக் கூட வழியில்லாமல் திண்டாடினதும், வருஷக் கணக்காய் ஜெயிலில் வதிந்ததையும், உலகம் அறியாதா? இந்த தமிழ்நாட்டு பார்ப்பனரான அய்யங்கார்கள் இவர் ஜெயிலுக்குப் போனார், அவர் ஜெயிலுக்குப்போனார், என்று எழுதி தாலும் தன் இனத்தாரும் மாதம் ஆயிரம், இரண்டாயிரம் கொள்ளையடித்துக்கொண்டு தேச பக்தராயிருந்த (இருக்கிற) காலத்தில் லாலாஜி, ஜெயிலிலும் வெளிநாடுகளிலும் அவஸ்த்

தைப்பட்டுக்கொண்டிருந்தவர். இப்படிப்பட்டவர் இந்த பார்ப்பனர்களுக்கு உள்ளாளாயில்லாவிட்டால் உடனே ஒழிப்பதற்கு துணிந்துவிடுகிறார்கள்.

கண்ணியம்

அதன் கொள்கைகளும் தலைவர்களும் இப்படி இருந்தாலும் அதன் கண்ணியம் எப்படி இருக்கிறது என்று பார்ப்போம்:—

கடைசி விஷயமாகிய சட்ட சபையை விட்டு வெளியேறிய வெளியேற்றத்தைப் பற்றி யோசிப்போம்.—

சட்ட சபை உபயோகமற்றதென்று வெளியேறியபின் தேசப் பொது நன்மையின் அவசியத்தைப்பற்றி அப்போதைக்கப்போது வரும் விஷயங்களை அனுசரித்துப் போவதும், போகாமலிருப்பதும், கமிட்டியார் தீர்மானிக்கிறபடி நடந்து கொள்வதென்று தீர்மானித்தார்கள். இந்து மத பரிபாலன மசோதா விஷயத்தில் கமிட்டியைக் கேளாமல் கமிட்டியின் பேரால் உத்திரவு போட்டு சுயராஜ்யக் கட்சியார் மசோதாவை எதிர்க்க வேண்டுமென்று சொல்லி விட்டார்கள்.

பிறகு அதன் தலைவர் அதை ஆதரித்து அந்த உத்திரவு சட்டப்படி செல்லத்தக்கது என்றும் கமிட்டி சாங்ஷன் அவசியமில்லை என்றும்சொன்னார் சுயராஜ்யக்கட்சி முக்கிய மெம்பரான தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டி காரியதரிசி சுயராஜ்யக்கட்சியார் சட்ட சபைக்குப்போய் மசோதாவை எதிர்த்தால் கட்சியை விட்டு விலகுவதாய் சொன்னவர், அவரும் பத்திரிகைக்கு ஏதோ எழுதிவிட்டு விலகாமலே இருக்கிறார். கமிட்டி மெம்பர் ஒருவர் கமிட்டி சாங்ஷன் இல்லாமல் சுயராஜ்யக் கட்சியார் சட்ட சபைக்குபோனதைக் கண்டித்து 2 வார்த்தை சொல்லிவிட்டு கமிட்டி மெம்பராகத்தான் இருந்து வருகிறார். இவ்வளவும் பொறாமல் அதன் தலைவர் மறுபடியும் முன் எழுதியதற்கு விரோதமாய் இந்து மத தர்ம மசோதா, கட்சி விஷயமுமல்ல, பொது விஷயமுமல்ல, தனிப்பட்ட விஷயம், அவரவர்கள் இஷ்டப்படி நடக்கலாம் என்றார். அப்படியானால் சட்ட சபை விட்டு வெளி வந்ததற்கு என்ன அருத்தம். கட்டுப்பாட்டுக்கு என்ன அருத்தம். கமிட்டி நியமித்ததற்கு என்ன அருத்தம். கமிட்டி மெம்பர் மிரட்டுவதற்கு என்ன அருத்தம். காரியதரிசி விலகுவதாய்ச் சொன்ன வாக்குறுதிக்கு என்ன அருத்தம். இது மாத்திரமா, வகுப்பு பிரசாரம் என்கிற பெயரை வைத்துக் கொண்டு பத்திரிகைகளின் சுதந்திரத்தைப் பிடுங்க இந்தியா சட்ட சபையில் சர்க்கார் கொண்டு வந்த மசோதாவை எதிர்க்காமல்சுயராஜ்யக் கட்சியார் கட்சிக் கட்டுப்பாடு என்கிற பெயரைச் சொல்லிக் கொண்டு அதை நிறைவேற்ற அனுகூலமாயிருந்ததற்கு என்ன அருத்தம்.

### யார் மதிக்கிறார்கள்.

கண்ணியம் இப்படியிருந்தாலும் அதையார் மதிக்கிறார்கள் என்று பார்ப்போம், சுயராஜ்யக்கட்சியென்கிறபெயரைஜனங்களுக்குபித்தலாட்டம் என்று சொல்லும் வார்த்தைக்கு மாறு பெயராய் உபயோகிக்கிறார்கள். கும்பகோணம் என்ற வார்த்தைக்கு எப்படி சூழ்ச்சி-மோசம் என்கிறவார்த்தை அகராதியில் இருக்கிறதோ, அதுபோல் சுயராஜ்யக் கட்சியென்றால் பார்ப்பனப் பித்தலாட்டம் என்கிற கருத்துடன் சாதாரண மக்களிடையே பழக்கத்தில் இருந்து வருகிறது. சர்க்காருக்கும்சுயராஜ்யக்கட்சி என்றால் வெகுபரிகாசமாய்விட்டது. அதன்மூலம் சில தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் உள்ள யோக்கியதையும் குறைந்தது, பார்ப்பனர் ஒருவர் தவிற வேறுயாரிடத்திலும் இது சமயம் அக்கட்சிக்கு மதிப்புமில்லை. அதோடுமாத்திரமல்லாமல் அக்கட்சிக்கு ஆதரவளித்தவர்களுக்கும் கெட்டபேர் ஏற்பட்டுவிட்டது. ஒத்துழைப்புக்கு மதிப்பும் செல்வாக்கும் ஏற்பட்டது- பார்ப்பனர் பிழைக்கவேண்டி இவ்வளவு மோசமானதும் புரட்டானதுமான ஒருகட்சியின் பெயரைச்சொல்லி சுயராஜ்யத்திற்குப் பாடுபடுவதாய் பாமர ஜனங்களை ஏமாற்றி ஆதிக்கம் பெற நினைத்ததின் பலன் பொது ஜனங்களுக்கு பார்ப்பனர் யோக்கியதை வெளியாக இது ஒரு சந்தர்ப்பமாக ஏற்பட்டதோடல்லாமல் மகாத்மா செய்தவேலையும் கெட்டு சர்க்காரிடம் பொது ஜனங்களுக்கு நம்பிக்கையும் ஒத்துழைக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டுப்போய்விட்டது. இனியும் கொஞ்சகாலத்திற்கு இப்பார்ப்பன சூழ்ச்சி நிலைத்திருக்குமானால் தற்காலம் மக்களுக்கு இருப்பதாய்ச் சொல்லப்படும் சிறுசிறு உரிமைகள் என்பதுகூட சர்க்காரிடமே ஒப்படைக்க வேண்டிவருமென்றே பயப்படுகிறோம் ஆதலால் பொது மக்கள் இக் கட்சியை விளையாட்டுக்காவது ஆதரிக்காமல் வரப்போகும் தேர்தலில் குழிதோண்டிப் புதைக்கவேண்டும் என்பதை ஞாபகமூட்டுகிறோம்.

## முளையிலேயே வெறுப்பு.

பார்ப்பனர் தங்கள் குழந்தைகளை சிறு பிராயம் முதற்கொண்டே நம்மை தாழ்ந்த ஜாதியார் என்று நினைக்கும்படி பழக்கி வருகிறார்கள் அதாவது தங்கள் குழந்தைகளை அடீ அடீ அவன் மீது படாதடி, அவன் சூத்ராச்சிடீ, அவன் மீது பட்டு விட்டையே போய் பாவாடையை நனைத்து குளித்து விட்டுவா, என்று பெண் குழந்தைகளுக்கும் அடே சூத்திரன்கள் மேலெல்லாம் பட்டு அவன்களை தொட்டுட்டு வந்துட்டையே போ, போ, போயி குளிச்சுட்டுவா என்றும் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குப் போனவுடன் பாவாடையை அவிழ்த்துவை, துண்டை அவிழ்த்துவை என்றும் சொல்லி நம்மிடம் அதுகளுக்கு ஒரு இழிவை சொல்லி கற்பிக்கிறார்கள். அந்தக் குழந்தைகள் ஏதாவது ஏனம்மா பள்ளிக்கூடத்திற்கு போனதற்காக துண்டை அவிழ்த்து வைக்கச் சொல்லுகிறாய் என்று கேட்டால் என்னடி அங்கு போய் சூத்திரக் குட்டிகளோடு நெருங்கி உட்கார்ந்து அவர்களையெல்லாம் தொட்டு விட்டு இங்கு வந்து வீட்டிற்குள் புகலாமா என்கிறார்கள் இதிலிருந்து அந்தக் குழந்தைகளுக்கு முளையில் இருந்தே பிராமணரல்லாதாரிடம் அருவருப்பும் அவர்கள் தொடக்கூடாத ஜாதி என்கிற உணர்ச்சியும் ஏற்பட்டு விடுகிறது. இந்தக்கொடுமைகளையெல்லாம் நமது பெரியவர்கள் அறிந்தே தான் பார்ப்பனன் என்பது அமங்கல வஸ்துவென்றும், அவனைக் காண்பதே சகுனத்தடை, அதாவது கெட்ட சகுனம் என்றும், நாம் போகும் காரியங்கள் அவன் கண்ணுக்குத் தெரிந்தால் கூட அவற்றை கெடுத்து தான் வாழப்பார்ப்பான் என்கிற எண்ணமும் அதில் வைத்து அவ்வளவு தாழ்மையாய் கருதி அனுபவத்தில் நமது பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுத்து வந்தார்கள். ஆனால் நாம் அவற்றையெல்லாம் மறந்து அதற்கு நேர் விரோதமாய் பார்ப்பனர் எழுதி வைத்ததை ஒப்புக்கொண்டு நாமும் நம்ம குழந்தைகளுக்கு அய்யர் மேல்பட்டு விடாதே அம்மா மேல் பட்டு விடாதே அவர்கள் உயர்ந்தவர்கள் என்று சொல்லுவதுடன் நாமும் நம்மை தாழ்ந்தவர்கள் என்றே நினைத்துக் கொள்ளுகிறோம். ஆதலால் நமது குழந்தைகளுக்கும் பள்ளிக்கூடப் படிப்பிலிருந்தே இதை ஒரு பாடமாய் வைத்து இவைகளின் உண்மைகளைப் பற்றி சொல்லிக்கொடுத்து அவர்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணத்தை மாற்றத் தகுந்த ஏற்பாடு செய்து வந்தால் தான் நமது சுயமரியாதையையாவது அடைய முடியும்.

---

### ஈரோட்டில் மருத்துவ குல சங்க ஸ்தாபிதம்.

இம்மாதம் 25-ந்தேதியன்று மருத்துவர் குல கூட்டம் ஒன்று கூடிற்று. பவானிபெரியக்ராஹாரம், வீரப்பஞ்சத்திரம் முதலிய இடங்களிலிருந்தும் இம்மரபினர் வந்திருந்தார்கள் இதன் அக்ராசனரான ஸ்ரீமான் ச. தாமஸ் பாலையாபிள்ளை தெரிந்தெடுக்கப்பட்டார். அக்ராசனர் இக்குலத்தவருக்கு இத்தகைய சங்கம் ஒன்று அவசியம் என்பதைப்பற்றி விரிவாகக்கூறினார். பின்னர் ஜனாப் மொகைதீன்பாக்ஷாவும் ஸ்ரீமான்கள் சி. வெங்கடாசலப் பண்டிதர் எஸ். பி. காத்தான் பண்டிதர் முதலியோரும் சங்கமுன்னேற்றத்தைக் குறித்துப் பேசினார்கள். இச்சங்கத்துக்குச் சபையோரால் ஏகமனதுடன் கௌரவ பிரசிடெண்டாக ஸ்ரீமான் ச. தாமஸ்பாலையா பிள்ளையும், வைஸ் பிரசிடெண்டாக ஜனாப் மௌதீன் பாக்ஷாவும், காரியதரிசியும் உதவி காரியதரிசியுமாக ஸ்ரீமான்கள் இ. வெங்கடாசல பண்டிதரும் எஸ். பி. காத்தான் பண்டிதரும், பொக்கிஷதாரராக ஸ்ரீமான் குழந்தைவேல் பண்டிதரும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

---

## பிராமணீயக் கொடுமை

இந்தியாவின் ஒற்றுமையைக் குலைப்பது
பிராமணீயம்!
இந்தியாவை வேற்றரசர் கையில் கொடுத்தது
பிராமணீயம்!
தமிழரை உறுமைக்குள்ளாக்கியது
பிராமணீயம்!
இந்தியா சுயராஜ்யம் அடையவதற்குத்
தடை கல்லாயிருப்பது பிராமணீயம்!
உடன் பிறந்த சகோதரர்களான தமிழர்கள்
அடித்துக் கொள்ளவும் நீதி மன்ற மேறி
வழக்காடவும் காரண பூதமாயிருப்பது
பிராமணீயமே!
தமிழர்களே இந்தப் பாழான பிராமணீயத்தை
நாட்டை வீட்டு ஓட்டுக.

# தீண்டாமையும் பார்ப்பனரும்.

## முனிசிபல் சட்டத்தில் ஸ்ரீமான் வீரய்யனின் திருத்த மசோதா.

இவ்வாரம் நடைபெற்ற சென்னை சட்டசபைக்கு ஸ்ரீமான் வீரய்யன் அவர்கள் முனிசிபல் சட்டத்திற்கு ஒரு திருத்த மசோதா அனுப்பியிருந்தார், அதாவது "பொதுத்தெருவை எவரேனும் உபயோகிக்க முடியாமல் தடுப்பவருக்கு 100ரூபாய் வரையில் அபராதம் விதிக்கலாம்" என்று ஒரு பிரிவை அதில் சேர்க்கவேண்டும் என்று அனுப்பியிருந்தார். அது பிரேரேபணைக்கு வரும் போது சில பார்ப்பனர்கள் தங்கள் ஜாதிப்புத்தியின்படி அதைக்கொல்ல சட்ட சம்பந்தமான ஆக்ஷேபணைகளை எழுப்பி விட்டார்கள். தாங்கள் பார்ப்பனர் சந்ததியார்கள் என்று சொல்லிக்கொள்வதால் பெருமைப்படும் சிலபார்ப்பனரல்லாதாரும்,சகியவருணாசிரமதர்மிகளும் அதற்கு உடந்தையாயிருந்து இந்த சபையில் அதை நிறைவேறாமல் செய்து விட்டார்கள். பொதுத்தெருவை பொது மக்கள் உபயோகப்படுத்திக்கொள்வதைத் தடுத்தவர்களுக்கு அபராதம் போடலாம் என்றால் அதை ஆக்ஷேபிப்பதற்கு நமது நாட்டில் ஜனங்கள் இருக்கும்போதும், அப்போப்பட்டவர்களை சட்ட சபைக்குத் தெரிந்தெடுக்கக் கூடிய பைத்தியக்கார ஓட்டர்கள் நமது நாட்டில் மலிந்திருக்கும்போதும், வெள்ளைக்காரரைப்பார்த்து "நாங்கள் சுயராஜ்யத்திற்கு தயாராகி விட்டோம் எங்களிடம் ராஜ்யத்தை ஒப்புவித்து விட்டு நீங்கள் போய்விடுங்கள்" என்று சொல்வது எவ்வளவு மடத்தனம் என்பதை வாசகர்கள் தான் உணர வேண்டும்.

இம்மாதிரி ஜனங்கள் மூலம் வரும் சுயராஜ்யம் பொது மக்களுக்கு உபயோகப்படுமாவென்பதை பொது மக்களே உணரவேண்டும் ஸ்ரீமான்வீரய்யன் அவர்களும்எம். சி. ராஜா, அவர்களும் வெள்ளைக்கார அரசாங்கம் இருப்பதின் பலனாகத்தான் சட்ட சபைக்கு போகவும்,தங்கள்சகோதரர்களாகிய7கோடி பேர்களுக்கு தெருவில் நடக்கும் உரிமையைக் கேட்கவும், சந்தர்ப்பம் கிடைத்தது. இப்பார்ப்பனர்கள் காங்கிரசும், அதுகோரும் சுயராஜ்யமும் ஒருசமயம் நமக்குக்கிடைத்து விடுவதாயிருந்தால் ஸ்ரீமான்கள் வீரையனும் ராஜாவும்,கோரும் தெருவில் நடக்கும் பாத்தியம் இவர்களுக்குக் கிடைக்குமாவென்பதை ஒவ்வொருவரும் நிதானமாய் யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம் "குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் போட்டுப்புதைப்பதற்கு குழி தோண்டிற்று" என்று ஒரு பழமொழி சொல்வதுண்டு. அது போல் தீண்டாத வகுப்பார் என்று ஒதுக்கிவைத்த ஸ்ரீமான்கள் வீரையன், எம். சி. ராஜா, ஹைகோர்ட்டு ஜட்ஜ் கிருஷ்ணன் ஆகியவர்களையும் அவர்கள் சகோதரர்களையும் தாங்களும் அனுமதிக்கக் கூடாது? சர்க்காரும் அவர்களுக்கு உதவி செய்யக்கூடாது? அவர்களாகவும் தலையெடுக்கக்கூடாது என்று கொடுமைப்படுத்துவதினால் அம்மக்களுக்கு வேறு கதிதான் என்ன? வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம், கேட்பதும் வகுப்புப் பிரச்சினைகளைக் கிளப்புவதும் தேசத்துரோகமென்று வெகுசுலபத்தில் நமது பார்ப்பனர்கள் சொல்லி பாமர ஜனங்களை ஏமாற்றி விடலாம் ஸ்ரீமான் ஜயவேலு போன்றவர்களைக் கொண்டு ரூ 40, 50 ரூபாய்கள் கொடுத்து ஸ்ரீமான் ராஜாவையும் வீரையனையும் மற்றும் இதுகளுக்காக உழைப்பவர்களையும் வையும்படி செய்யலாம் இதுகளுக்குப்பயந்துகொண்டு சிலரை அடங்கி இருக்கும்படியும் செய்து விடலாம். ஆனால் அவர்கள் மனதில் உள்ள வழி நடை சுதந்திரதாகத்தை அடக்கி விடமுடியுமா என்பதை யோசிக்க வேண்டும்:- சென்ற மாதம் நாம் கும்பகோணம் சென்றிருந்தபோது அந்த டவுனில் 3, 4, வீதிகளில் அதாவது அய்யங்கார் தெருவு வியாசராயர் அக்கிரகாரம் பட்டாச்சாரித்தெரு முதலிய தெருக்களில் இன்னமும் சிலர்கள் நடக்கக்கூடாது என்கிற கொடுமை இருந்துதான் வருகிறது. இதோடு மற்றொரு வேடிக்கை அதென்ன வென்றால் கூரத்தாழ்வார் கோவில் என்று ஒரு கோவில் இருக்கிறது. அதற்குள் பார்ப்பனரின் காப்பிக்கடை இருக்கிறது. அக் காப்பிக்கடைக்காக ஒரு கக்கூசு இருக்கிறது. அக்கக்கூசு எடுக்க தீண்டப்படாதவர் "தினமும் இரண்டு தடவை மலபாண்டங்களுடன் போய்வந்து கொண்டிருக்கிறார் கூரத்தாழ்வார் கோவிலை விட இந்த அய்யங்கார் வீதியும் வியாசராயர் வீதியும் பட்டாச்சாரி வீதியும் நமது பார்ப்பனருக்கு உயர்ந்ததாய்ப்போய் விட்டது.

மலபாண்டத்துடன் கோவிலுக்குள் போய் வருவதைவிட வெறுங்கையுடன் நடப்பது நமது பார்ப்பனருக்கு அதிக பாவமாய்ப் போய்விட்டது. இவ்வளவு துப்பாக்கியும், பீரங்கியும் ஆகாயக் கப்பலும் பட்டாளமும், இருந்தும் வீதியில் நடக்கவிடாமல் உதைக்கிறார்கள், என்றால் இதுகள் ஒழிந்த பிறகு இவர்கள் என்னதான் செய்யமாட்டார்கள். வெள்ளைக்காரர்கள் வந்து 150வருஷங்கள் தான் ஆகிறது இந்தக் கொடுமை ஏற்பட்டு 1000க் கணக்கான வருஷங்கள் ஆகிறது. ஏறக்குறைய வெள்ளைக்காரர்கள் வந்தபிறகே இக் கொடுமைகள் கொஞ்சமாவது மாறுபாடு அடைந்திருக்கின்றன. ஆதலால் வெள்ளைக்காரரை ஓட்டுவது இம்மக்களுக்கு உரிமைக்கும் சுயமரியாதைக்கும் நன்மையக்குமா? இப்பார்ப்பனீயத்தை அழிப்பது நன்மையக்குமா? என்பது நாம் சொல்லாமலே விளங்கும். யாரோ இரண்டொரு பார்ப்பனர் நம்மவீட்டில் சாப்பிடுவதாலும், தீண்டாதார் "தொட்டதை சாப்பிடுவதினாலும் மக்கள் உரிமை பெற்றுவிட முடியுமா? பார்ப்பனரிலும் சிலயோக்கியர்கள் இருக்கிறார்கள்" என்று சில ஏமாந்த சோணகிரிகளை ஏய்க்கவே அவர்கள் நம்ம வீட்டில் சாப்பிடுவதே ஒழிய வேறில்லை என்றே உறுதியாய்ச் சொல்லுவோம்.

உதாரணமாக ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் குடியை ஒழிப்பதற்காக சட்ட சபைக்கு ஆட்களை அனுப்புகிறேன் என்று சில பார்ப்பனர்களை அதுவும் கள் உற்பத்தி செய்து கள்ளினால் பணம் சம்பாதித்து ஏழைகள் வயிற்றில் மண்ணைப்போட்டு அவர்கள் தொழிலைக் கெடுத்த பார்ப்பனர்கள் பின்னால் அவருக்கு ஓட்டுவாங்கிக்கொடுக்க கிராமம் கிராமமாய்த்திரிந்தாரே; இம்மாதிரி தெருவில் நடக்கும் உரிமையும் கண்ணில் தென்படும் உரிமையும் இல்லாமல் தவித்துக்கொண்டு பூச்சி புழுக்களிலும் கேவலமாய் நாய் பன்றிகளை விட இழிவாய் நடத்தப்பட்டு கொடுமைப்படும்சகோதரர்களுக்காக சட்டசபைக்கு ஏன் ஆட்களை அனுப்பக்கூடாது? மதுவை விலக்க தீர்மானம் செய்தால் அது செல்லாது என்பதும் அனுபோகத்தில் நடக்காது என்பதும் நன்றாய்த்தெரிந்திருந்தும் பார்ப்பனரல்லாத மந்திரிகளும் அவர்கள் கட்சிக்கும் கெட்டபெயரை உண்டாக்கி அடுத்ததேர்தலுக்கு அவர்கள் சட்டசபைக்குப்போக முடியாமல் செய்து, பார்ப்பனரையும் அவர்கள் தம் அடிமைகளையும் சட்டசபைக்கு அனுப்ப முயற்சித்துப் பார்த்தார் ஆனால் தீண்டாமை விலக்குக்காக ஆட்களை சட்ட சபைக்கு அனுப்பினால் அவர்கள் மெஜாரிட்டியாய் இருந்து செய்யும் தீர்மானம் நிறைவேறும். நிறைவேறியபடி நடக்க சவுகரியமுண்டு. சர்க்கார் இதில் பிரவேசிக்க முடியாது. நாம் சட்டம் செய்து கொடுத்துவிட்டால் அவர்கள் அதை நிறைவேற்றியே ஆகவேண்டும். அப்படியானால் அது பார்ப்பன ஆதிக்கத்திற்கு இடையூறாயிருக்கும் என்கிற எண்ணத்தினாலேயே அதைக் கவனிக்காமல் மூடி வைத்துவிட்டார். இப்போதும் அதிக கால தாமதமேற்பட்டு விடவில்லை. தீண்டாமை என்கிற ஒரு விஷயத்திற்கு மாத்திரம் சட்ட சபைக்கு போவதாய் "தீண்டாமையில் அனுதாபமுள்ள ஆச்சாரியார்" வெளிக்கிளம்பினால் அவரை ஆதரிக்க தமிழ் மக்கள் தயாராயிருக்கிறார்கள். அது நிறைவேறுவதாய் இருந்தால் தேவஸ்தான மசோதாக்கூட அவ்வளவு அவசியமில்லை யார் வருவதானாலும் ஒத்து வேலை செய்யவும் தயாராயிருக்கிறோம். பார்ப்பனரல்லாதாராகிய ஜஸ்டிஸ் கட்சியாரும் தயாராகவே இருக்கிறார்கள், ஸ்ரீமான்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடு, கலியாணசுந்தர முதலியார் இராமசாமி நாயக்கர் ராமநாதன் முதலியவர்கள் அந்தக் காரியத்திற்காக சட்ட சபைக்குப் போகவும்கூட தயாராயிருப்பார்கள். அதை விட்டுவிட்டு ஆகாத காரியத்தைச் சொல்லிக்கொண்டு யோக்கியர்கள் அல்லாதவர்களும் கண்ணியமற்றவர்களும் மாத்திரம் தன்னுடன் வந்து சேரும்படியாகப் பார்த்து அதற்காக ஒரு கட்சிப் பேரையும் மகாத்மா பேரையும் உபயோகப்படுத்திக்கொண்டு தேச நன்மை ஏழைகள் நன்மை, என்று ஏமாற்றும் காலம் மலையேறிவிட்டதென்றும் பொது ஜனங்கள் இத் தந்திரக்காரப் பார்ப்பனரை நன்றாய் அறிந்துகொண்டார்கள் என்றும், வரப்போகும் தேர்தலில் அவர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்கப் போகிறார்கள் என்றும் சொல்லுவதோடு ஸ்ரீமான்களான வீரய்யன் அவர்களுக்கும் எம்.சி. ராஜா அவர்களுக்கும் உங்கள் தீர்மானத்தை சில பார்ப்பனர் சூழ்ச்சியால் இந்த சட்ட சபைக் கூட்டத்தில் தள்ளி வைக்க நேர்ந்தாலும் அடுத்த கூட்டங்களில் கண்டிப்பாய் அது நிறைவேறவும் அமுலில் வரவும் கூடிக்காரியங்களைச் செய்ய தயாராயிருக்கிறோம் என்பதாக உறுதி கூறுகிறோம்.

## பூனா பார்ப்பனரின் கர்மபலன் கண்டனக் கூட்டம்.

பூனா பிராமணர்கள் பெரும்பாலும் லோகமானிய திலகர் என்றழைக்கப்படும் கடும் வர்ணாசிரமியான ஸ்ரீமான் திலகர் ஜாதியைச் சேர்ந்தவர்கள். மகாத்மா காங்கிரசுக்கு முந்திய காங்கிரசுகள் இப்போதைய காங்கிரசைப் போலவே பார்ப்பனக் காங்கிரசாயிருந்ததாலும் இப்போதைய "தலைவர்கள்" ஸ்ரீமான்கள் பண்டித நேரு பண்டித சரோஜனி, எஸ் சீனிவாசய்யங்கார், எ. ரங்கசாமி அய்யங்கார் எம். கே. ஆச்சாரியார், சத்தியமூர்த்தி போன்ற பார்ப்பனர்கள் இந்திய தேசத் தலைவர்களா யிருப்பது போலவே அப்போதும் ஸ்ரீமான்கள் திலகர், மாளவியா, முதலிய பார்ப்பனர்களே தலைவர்களாயிருந்தார்கள். இப்போது இவர்கள் பார்ப்பனப் பத்திரிகைகளாலும், பிரசாரத்தாலும் படம் வைத்து கும்பிடத் தகுந்தவர்களாயிருந்தபோதிலும், சமுதாயவிஷயத்திலும் சமத்துவ விஷயத்திலும் ஸ்ரீமான் திலகர் நமது ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியாருக்கு ஒரு படி முன்னால் இருப்பவர். அப்பேர்ப்பட்டவர் பத்திரிகை உலகத்திலும் பிரசார உலகத்திலும், அரசியல் உலகத்திலும் சிரேஷ்டமாய் விளங்கி செல்வாக்கோடு வாழ்ந்த ஊராகிய பூனா நகரத்தில் பார்ப்பனத்திக்கம் எவ்வளவு வளர்ந்திருக்கும், எவ்வளவு குடிகொண்டிருக்கும் என்பது நாம் சொல்லாமலே விளங்கும். அதின் பலனாய் அவ்வூரில் உள்ள பார்ப்பனரல்லாதார் தீண்டப்படாதாரைப் போல் கருதப்படுவதுடன் தண்ணீர்க்குழாய் முதற்கொண்டு பார்ப்பனருக்கு தனித்தனியாய் ஏற்பட்டு வந்ததும் பார்ப்பனரல்லாதார் பார்ப்பனப் புரோகிதரைக் கொண்டே வைதிகச் சடங்குகள் நடத்தவேண்டும் என்கிற சட்டமிருக்கிறதுமான கொடுமைகள் நடத்த சௌகரியமேற்பட்டிருந்தது. ஆனால் ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டதின் பலனாய் அவ்விடத்திய பார்ப்பனரல்லாதார் தங்கள் சுயமரியாதையை உணர ஆரம்பித்தார்கள். ஆரம்பித்து அவர்கள் மனோபாவம் எதுவரை சென்றது என்று தெரியவேண்டுமானால் சென்ற வருஷம் மத்திய மாகாணத்தில் நடந்த பார்ப்பனரல்லாதார் மகாநாட்டு அக்கிராசனர் ஸ்ரீமான் பாக்டே அவர்களின் சொற்பொழிவையும் அங்கு நடந்த திரு விளையாடல்களையும் கவனித்தால் தெரிய வரும். அதாவது, கொட்டகையில் கட்டியிருந்த திலகர் படத்தை எடுத்து எறிந்தும், ஸ்ரீமான் திலகரைப் பற்றி அக்கிராசனர் பேசும்போது அவரைக் கண்டித்ததும், பிராமணர்களை அடியோடு ஒழித்தால் அல்லது சுயராஜ்யம் வராது என்று சொன்னதும், சில பார்ப்பனரையும் அவர்களுக்கு அனுகூலமாயிருந்தவர்களையும் தடியினால் அடித்தும், கத்தியில் குத்தியும் உபத்திரவப்படுத்தியதும், ஆகிய இன்னும் பல காரியங்கள் நிகழ்ந்தன. அல்லாமலும் அது புகைந்துகொண்டே இருந்து இப்போது தெருவில் நடக்கும் பார்ப்பனப் பெண்களைக்கூட உபத்திரவப் படுத்துவதாகவும் தெரியவருகிறது. இவைகளை நாம் பலமாய் வெறுக்கிறோமானாலும் இதைக் கர்மபலன் என்றுதான் சொல்லவேண்டும். இதற்காக பூனா பார்ப்பனர்கள் சிவாஜி மந்திரத்தில் ஆறாயிரம் பேர் கூடி பார்ப்பனரல்லாதார் பார்ப்பனரிடம் துவேஷம் கொண்டிருப்பதையும் பார்ப்பன ஸ்திரீகளை பார்ப்பனரல்லாதார் அவமதிப்பாய்ப் பேசுவதையும் மான பங்கப்படுத்துவதையும் ஒரு வருஷ காலமாக நடந்துவருவதை கவர்ன்மெண்டார் பார்த்துக்கொண்டு தெரியாதவர்கள் போல் இருப்பதாயும் கூறி பார்ப்பனர் மீது துவேஷம் உண்டாகும்படி பார்ப்பனரல்லாதார் பிரசுரிக்கும் துண்டுப் பிரசுரங்களை நிறுத்த கவர்ன்மெண்டார் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் பேசி ஸ்ரீமான் திலகரின் மருமகப் பிள்ளையாகிய ஸ்ரீமான் கெல்கார் உள்பட கண்டனத் தீர்மானங்கள் செய்து கவர்ன்மெண்டை உதவிக்கழைத்திருப்பதாய் 31-8-26-உ மித்திரனால் தெரிகிறது. இதில் கவர்ன்மெண்டார் என்ன செய்யக்கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை. பார்ப்பனரின் நடவடிக்கையை உள்ளபடி எடுத்துச் சொன்னால் யார் என்ன செய்ய முடியும். இந்தப் பார்ப்பனர்கள் சர்க்காரை சகாயத்திற்குக் கூப்பிடுவதைவிட ஏன் தங்களுடைய நடவடிக்கைகளை திருத்திக்கொள்ளக்கூடாது. ஒரு மனிதன் தனது கரும பலனை அடையாமல் இருக்கும்படி செய்ய கடவுளாலும் ஆகாதென்றால் இந்த சர்க்காரால் என்ன ஆய்விடும். ஆதலால் இவைகளைப்பற்றி சிபார்சுக்கு ஆள்களைக் கூப்பிடுவதில் பிரயோஜனமில்லை. பார்ப்பனர் புத்திசாலிகளாயிருந்தால் பூனா பார்ப்பனருக்கும் பார்ப்பன ஸ்திரீகளுக்கும் ஏற்பட்ட இந்த விபாதிக்குத் தக்க பிராயச்சித்தம் செய்து மற்ற நாடுகளுக்கு பரவாமல் பந்தோபஸ்து செய்வதுதான் ஒருக்கால் முடியக்கூடிய காரியமாகலாம். அஃதில்லாமல் ஸ்ரீமான்கள் ரங்கசாமி அய்யங்காரும் சத்தியமூர்த்தி சாஸ்திரிகளும் எம். கே. ஆச்சாரியாரும் சீனிவாசய்யங்காரும் சி. ராஜகோபாலாச்சாரியாரும் சி. வி. வெங்கட்டரமணய்யங்காரும் நடந்து கொள்ளுகிற மாதிரியும், பார்ப்பனரல்லாதாருக்குள்ளாகவே கட்சி ஏற்படுத்துவதும், பார்ப்பனரல்லாதார் கட்சியை அழிக்கச் சூழ்ச்சி செய்வதும் ஆகிய தந்திரங்கள் கண்டிப்பாய் பார்ப்பன சமூகத்தையே கர்மபலனை அடையச் செய்யுமென்று உறுதி கூறுகிறோம். இந்தப் பார்ப்பனத் தலைவர்கள் தங்களிடம் கூலி வாங்கிப் பிழைக்கும் ஆள்களுடையவும் தங்கள் தயவுக்குக் காத்திருக்கும் ஆள்களுடையவும், மனோபாவத்தை மாத்திரம் அறிந்திருக்கிறார்களே அல்லாமல் மற்றபடி சுதந்திரமுள்ள பார்ப்பனரல்லாதார் மனோபாவம் என்ன என்பதையே அறியாமலிருப்பதற்கு நாம் மிகவும் பரிதாபப் படுகிறோம்.

---

ராவ் சாஹிப் சேலம் ஸ்ரீமான்
S. எல்லப்ப செட்டியார் அவர்கள்.

தனது நண்பர்களின் விருப்பத்திற்கிணங்க அடுத்துவரும் சென்னை சட்ட சபை எலெக்ஷனில் சேலம் ஜில்லா முகமதியரல்லாதார் தொகுதிக்கு ஏற்பட்டிருக்கும் இரண்டு ஸ்தானங்களுள் ஒன்றுக்கு தான் ஒரு அபேக்ஷகராக நிற்கப் போவதாக தெரிவிக்கிறார்.

## ஒரு சம்பாஷணை

கருப்பண்ணன்.—என்ன சுப்பண்ணா! இந்த பார்ப்பனர் மாத்திரம் சின்ன பையன்களுக்கெல்லாம் கலியாணம் செய்து விடுகிறார்களே அதென்ன சங்கதி?

சுப்பண்ணன்.—ஓ! இது உனக்குத் தெரியாதா? இவர்களுக்கு பிச்சை வாங்கி பிழைப்பதுதானே வேலை; ஆதலால் நம்முடைய பெரியவர்கள் கலியாணமானவனுக்கு ஒரு அணா, கலியாணமாகாதவனுக்கு கால் அணா கொடுக்கிற வழக்கம். ஆதலால் சின்னப் பையனுக்கும், சின்னப் பெண்ணுக்கும் ஒரு அணா கிடைக்கட்டுமென்று கலியாணம் செய்துவிடுகிறார்கள்.

கருப்பண்ணன்.—அப்படியா! இதற்காகத்தானா இவ்வளவு பெரிய அனியாயம், பிச்சை கொடுப்பவர்களுக்கு எப்படி கலியாணம் ஆனதும் ஆகாததும் தெரியும்.

சுப்பண்ணன்.—கலியாணமான சின்னப் பையன்கள் வடக்கயிறு போல பூணூலை மொத்தமாகப் போட்டிருப்பார்கள், கோவணம் வைத்து வேஷ்டி கட்டிக்கொள்ளுவார்கள். அந்தச் சின்ன பெண்களும் கோவணம் போட்டு சேலை கட்டிக்கொள்ளுவார்கள். தாலியை நன்றாய் வெளியில் காட்டிக் கொள்ளுவார்கள்.

கருப்பண்ணன்.—சரி, சரி, இப்பொழுது எனக்கு நன்றாய் விளங்கிற்று. இந்தப் பிச்சைக்காசுக்காக எத்தனை பார்ப்பனப் பெண் தாலியறுப்பது அனியாயம் அனியாயம்.

## சுயராஜ்யக் கக்ஷியின் இரகசியம்

சுயராஜ்யக் கக்ஷியார் "மாறுதல் வேண்டாதாருக்குப்" பணம் கொடுத்துத் தங்கள் கக்ஷியில் இழுத்துப்போட்டு அவர்கள் மூலமாய் பாமர ஜனங்களை ஏமாற்றி வருகிறார்கள். என்று நாம் சொல்லிவருவது வாசகர்களுக்கு நினைவிருக்கும். அதை வெளிப்படையாய் நிரூபிக்க தக்க சமயம் ஒன்று 31-9-26 மித்திரனில் கூலிக்குமாரடியா என்கிற தலைப்பின் கீழ் நேருமிஸ்ரா கடிதப் போக்குவரத்து என்று எழுதியிருக்கும் வியாசத்தைப் பார்த்தால் விளங்கும். ஐக்கிய மாகாணத்தில் ஸ்ரீமான் கௌரிசங்கர மிஸ்ரா என்கிற ஒரு பிராமணர் ஒத்துழையாமையில் ஈடுபட்டுத் தனது வக்கீல் வேலையை விட்டு ஜெயிலுக்கும் போய்வந்தார். அவரை மாதம் 250 ரூபாய் கொடுத்து சுயராஜ்யக்கட்சி நிர்வாகஸ்தராய் ஏற்படுத்தியிருந்ததாயும் 8 மாதகாலம் வேலையில்லாமல் சம்பளம் கொடுத்து வந்ததாயும், அப்புறம் 200 ரூ வீதம் சிலமாதம் கொடுத்துவந்ததாயும், வேலை திருப்தியில்லாததால் நிறுத்திவிட்டதாயும், மறுபடியும் 1926 மே மாதம் முதல் 150 ரூபாய் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டதாயும், தேர்தல் வேலைக்கு பிரசாரம் செய்யவே ஏற்படுத்தினதாயும், முன் பணம் 750 ரூபாயும் கொடுத்ததாகவும், மறுபடியும் அதிகப் பணம் கேட்டதாகவும், கொடுக்காததால் அவர் எதிர்ப்பிரசாரம் செய்வதாகவும் காணப்படுகிறது. இதிலிருந்து சுயராஜ்யக்கட்சிக்கு ஆள் சேர்க்கும் விபரம் தானாகவே விளங்கும்.

## பாபவிநாசம் சிவபிரான் கோவிலும் பார்ப்பனர்களின் அக்கிரமச் செயல்களும்.

எளியோங்களாகிய யாங்கள் 7—8—26 முதல் 9—9—26 வரை மூன்று நாள் தென்பாண்டி நாட்டிலே அகத்திய முனிவர் இருப்பிடமாயமைந்த பொதிகைமலையைச் சார்ந்த பாபவிநாசம் என்னுந் திருத்தலத்திற்கு ஆடி அமாவாசி தீர்த்த மாடும் பொருட்டுச் சென்றிருந்தோம். அங்கே சிருங்கேரி சங்கராச்சாரியர் வந்திருப்பதாகத் தெரிந்தோம். அவர் இறங்கியிருக்கும் இடம் பாபவிநாசம் கோவில் தெற்குப் பிரகாரத்தில் இருக்கும் தேவர் சத்திரமாகும். தெற்கு வெளிப் பிரகாரத்தில் பொது ஜனங்கள் பிரகாரம் வருவதற்கு இடமன்னியில் முழுவதுமே பந்தல்போட்டு போஜனப்பிரையாக அடைத்து விட்டார்கள். உட்பிரகாரத்திலும் ஷை சங்கராசாரியரைக் காணவந்திருக்கும் பார்ப்பனக் கூட்டங்கள் நெருங்கி ஒரு பக்கம் சமையலும், ஒரு பக்கம் கலீசும், ஒரு பக்கம் போஜன இடமுமாக வகுக்கப்பட்டுத் தல யாத்திரை வாசிகள் கோவிலின் உட்பிரகாரம் வெளிப்பிரகாரம்வந்துதரிசிப்பதற்கு இடமில்லாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. உள்ளே வலம் வரும் முதற்பிரகாரமும் பார்ப்பனர்கள் ஆண் பெண் சகிதமாக படுக்கை இடமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கோவில் விசாரணைக் கருத்தர்களும் இதைப்பற்றி கொஞ்சமும் கவனம் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. அவர்கள் தான் அப்படியிருந்தாலும்உலகத்திற்கெல்லாம் நன்னெறிகாட்ட வெளிவந்தசங்கராசாரியராவது கோவிலில் மல ஜலங் கழித்தல் முதலிய அநாச்சார செயல்களைச் செய்யாம லிருக்கும்படியாகவும், தரிசனஞ் செய்ய வரும் பொது ஜனங்கட்கு இடையூறின்றித் தரிசனம் செய்து போவதற்கு வேண்டிய சௌகரியங்களை அமைத்துக் கொடுக்கும்படியாகவும் தூண்டாமலிருப்பதானது அவரது ஆசாரியத் தன்மையின் சிறப்பை வெளியாகக் காட்டுகின்றது.

மலஜலங் கழித்தல், சமையல் செய்து சாப்பிட்டு எச்சில் செய்தல், குடும்ப சமேதராய்ப் படுக்கை வைத்துக்கொள்ளுதல் முதலியன, சைவசமய விதிப்படி திருக்கோவில்களில்செய்யத்தகாத குற்றச்செயல்களாதலோடு கோயிலைச் சம்புரோக்ஷணை செய்தாலன்றிப் பரிசுத்த மடையாதென்பதைச் சைவாகமங்களும் நீதி நூல்களும் பெரிதும் முறையிடுகின்றன.

சங்கராசாரியரின் பொருட்டு தெற்கு வெளிப் பிரகாரத்தை பந்தலிட்டு போஜனப் பிரையாக அடைத்திருப்பதால் வழக்கமாய் ஆடி அமாவாசி தோறும் நடத்திவரும் ரிஷப வாகன எழுந்திருத்து இவ் ஆடி அமாவாசையில் நடைபெறவில்லை. இது பல ஜில்லாக்களிலிருந்தும் பல ஆயிரக் கணக்காய் வந்துகூடிய ஜனங்கள் ரிஷபவாகனரூடராய் எழுந்தருளும் சுவாமி தரிசனத்தை மிகவும் அன்புடனும் ஆவலுடனும் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் தரிசனம் கிடையாமற் போனமையால் ஷை ஜனங்கள் பெருங் கவலைக் கிடமாய் மனம் புண்பட்டது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? இது நிற்க, ஆலயங்களில் நித்திய நைமித்திக பூசைகள் எக்காரணங்களாலேனும் தவறுமேயானால் அதற்குக் கூறப்பட்டுள்ள பிராயச் சித்தத்தை உடனே நடத்தினாலொழிய பூசை முதலியன செய்யலாகாதென்பது சிவாகமங்களில் விதிக்கப்பட்டுள்ளது. அவ்விதிப்படி பிராயச் சித்தமேனும் அவசியம் செய்திருக்கவேண்டும். அப்படி ஒன்றும் செய்திருப்பதாகத் தெரியவில்லை சிவாலயத்திற்கு நடத்தவேண்டிய விதிமுறை நடத்தாமையினால் நேரிடும் பெரும் கொடும் சிவாபராதத்திற்கு கோவில் விசாரணை கர்த்தர்களும்

## இந்துமத பரிபாலன மசோதா,

இவ்வார சட்ட சபைக் கூட்டத்தில் நமது பாப்பனர்களுக்கு எமனாய் விளங்கும் இந்துமத பரிபாலன மசோதா முக்கால்பாகம் பார்ப்பனர்களின் பஞ்ச தந்திரங்களுக்கிடையில் பெரும்பாகம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மற்ற பாகமும் நிறைவேற்றப்பட்டு மலையாளக் குடிவார மசோதாவைப் போல் பூரண வெற்றிபெற வேண்டுகிறோம். இவ்விரண்டு மசோதாவையும் எதிர்த்தவர்களுக்கு அடுத்த தேர்தலில் தக்கபடி புத்தி கற்பிப்பார்கள் என்றே நம்புகிறோம்.

## ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா 5-வது தேசிய மகாநாடு.

(புதுச் செங்கெல் குளம்) ராமச்சந்திரபுரத்தில் 1926-ம் வரு செப்டம்பர் மீ 26 27உகளில் நடத்தத் தீர்மானித்து சென்னை "நவசக்தி" ஆசிரியர், ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது, என்று வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் ரா. கிருஷ்ணசாமி எழுதுகிறார்.

கட்டண விகிதம்,

| | |
|---|---|
| வரவேற்புக்கமிட்டி அங்கத்தினர் | ரூ 2-0-0 |
| பிரதிநிதிகள் | ரூ 1-0-0 |
| விஸிட்டர்கள் | ரூ 0-8-0 |

## நாடார் மகாஜன சங்கம் மதுரை.

நாடார்குல எழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்க நாடார் மகாஜன சங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட லாட்டரிச்சீட்டு பிரைஸ் எடுக்க, எல்லா ஏற்பாடுகளும் முடிவு பெற்றது. ஆவணி மீ 27 (12—9—26) ல் பிரைஸ் எடுக்கப்படும். சிட்டு விற்பனை செய்த நண்பர்கள் விற்பனைத்தொகை, விற்ற இரசீது நகல், விற்காத புத்தகம், இவைகளை அனுப்பவேண்டும், ஏற்றகாலத்தை இழந்துவிடாதீர்கள். அதிரிஷ்டமிருப்பின் உயர்ந்த பிரைஸ்.

காரியதரிசிகள்,

அத்தீச்செயலுக்குக் காரணமாயிருந்த சங்கராசாரியரும் அவரைச் சார்ந்தவர்களுமே ஆளாவார்கள் என்பதிற் சந்தேகமில்லை. அந்தோ! கொடுமை! கொடுமை!! கொடுமை!!!

இத்தகைய பாவத்தை ஈட்டுதற்கும், உலகம் பழிப்பதற்கும் தீநெறிச் செயலை விளைப்பதற்குமேயோ இச் சங்கராசாரியர் சுற்றுப்பிரயாணம் செய்கிறார். பரிதாபம்! பரிதாபம்!! பரிதாபம்!!!

இத்தகைய தீயச் செயல்கள் சிவாலயங்களில் நடைபெறாமல் விலக்காத வரையில் உலகத்திற்கே பெருங்கேடு விளையுமென்பது சைவ நூல்களின் துணிபு. ஆதலால் இதனை விலக்குமாறு முயற்சி செய்தல் சைவ சமயிகளின் முக்கிய பெருங் கடமையாகும்.

சைவாபிமானிகள்.

## ஓர் வேண்டுகோள்.

பார்ப்பனரல்லாதாருக்கு ஓர் வேண்டுகோள் என்னும் தலைப்பின் கீழ் 25-7-26 உ "குடி அரசு" தலையங்கம் எழுதி பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதையைக் காக்கவும், தாழ்த்தப்பட்ட மக்களை சமத்துவப் படுத்தவும், பொது அரசியல் உரிமையை எல்லாச் சமூகமும் சமமாய் அடைய இந்திய மக்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பெறவும் "குடி அரசி"ன் தத்துவங்களை வைத்து சில திட்டங்களை வகுக்கவும் அவற்றை தமிழ் மக்கள் சேர்ந்து கட்டுப்பாடாய் நிறைவேற்றவும் ஒரு அறிக்கை வெளியிடவும், அவ்வறிக்கையில் பல கனவான்களின் கையொப்பங்களையும் சேர்த்து வெளியிட வேண்டுமென்ற விருப்பங் கொண்டு யார், யார் இத்தத்துவங்களை ஏற்றுக் கொள்ள சம்மதிக்கிறார்களோ, அக் கனவான்கள் பெயரை அவ்வறிக்கையில் வெளியிட வேண்டும் ஆகையால் தங்கள் தங்கள் பெயரையும் முழு விலாசத்தையும் சம்மதத்தையும் எழுதியனுப்புமாறு வேண்டிக்கொண்டதில் இது வரை சுமார் ஆயிரம் பெயர்களுடைய கையெழுத்தும் சம்மதமும் நமக்குக்கிடைத்திருக்கின்றன. இன்னும் இத்தத்துவங்களை ஏற்றுக்கொள்ளும் கனவான்கள் தயவு செய்து சீக்கிரத்தில் அனுப்பிக் கொடுப்பதோடு மற்றும் இதை ஏற்றுக் கொள்ளும் தங்கள் தங்கள் நண்பர்களிடமும் கையெப்பம் வாங்கியனுப்ப வேண்டுகிறோம் பார்ப்பனீயத்தை விட்டவர்கள் கையெப்பமும் வந்துகொண்டிருக்கிறது. அவற்றை இனி அனுப்புபவர்கள சென்னை தமிழ் நாடு பத்திரிக்கைக்கு அனுப்பினால் அதைப்பார்த்து குடி அரசில் பதிப்பிக்கப்படும். இல்லாத வரை இரண்டு இடத்திற்கும் அனுப்புவது கிரமமாயிருக்கும், ஆதலால் குடியரசின் தத்துவங்களை ஒப்புக் கொள்ளும் கையொப்பங்களை மட்டும் நமக்கு அனுப்பவேண்டுகிறோம்.

## மலையாளக் குடிவார மசோதா.

இவ்வார சட்ட சபையில் நமது பார்ப்பனர்கள் கடும் சூழ்ச்சிகளுக் கிடையில் மலையாளக் குடிவார மசோதா சட்டமாக்கப்பட்டுவிட்டது. இனி மலையாளத்தில் உள்ள பார்ப்பன ஆட்சிக்கு இதன் மூலம் வீழ்ச்சி ஏற்பட்டுவிட்டது என்பதையும் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும்

மகாத்மாவின் யங் இந்தியாவின் தத்துவங்களைத் தழுவி இனிய தமிழில் நல்ல தாழில் தெளிவான அச்சில் 2—ம் பதிப்மாய் 500—பக்கங் கொண்ட புத்தகமாக "நவசக்தி" ஆசிரியர் ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்களால் எழுதப்பட்டது.

விலாசம்:— விலை ரூ. 2.

முருகவேல்,
புத்தகசாலை ராயபேட்டை, சென்னை.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே

குடி அரசு.

அக்ஷய-ஹூ ஆவணி-மீ 20-உ

# பார்ப்பனரல்லாத பிரமுகர்களின் சுற்றுப்பிரயாணம்.

—:o:—

இவ் வருட இறுதியில் நடைபெறப் போகும் இந்தியா சட்ட சபை சென்னை சட்டசபை முதலிய தேர்தல்களுக்கு கூடுமானவரை நமது பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாரை அழுத்தி பார்ப்பன ஆட்சியை நிலை நாட்ட பலவழிகளிலும் செய்து வரும் சூழ்ச்சிகள் நமது நாட்டில் அறியாதார் இருப்பார்கள் என்று நாம் நினைக்கவில்லை ஆனாலும் பார்ப்பனரல்லாதாரில் சில சுய நலக்காரர்களையும் வயிறு வளர்க்க வேறு வகையில்லாதவர்களையும் ஆயுதமாகக் கொண்டு பாமரமக்களை ஏமாற்ற நமது பார்ப்பனர் செய்து வரும் தந்திரங்களைக் கண்டு நாம் பயப்படாமலிருக்கவும் முடியவில்லை. உதாரணமாக தமிழ் நாட்டில் இந்தியா சட்ட சபை தேர்தலுக்கும் சென்னை சட்ட சபைத் தேர்தலுக்கும் காங்கிரசின் பேரைச் சொல்லிக் கொண்டும் சுயராஜ்யம் பெறுவதற்கென்றும் நிறுத்தப்பட்டிருக்கும் ஆசாமிகளை கவனிக்கும்போது பாமர ஜனங்கள் இதை நம்பி இந்த ஆசாமிகளுக்கு ஓட்டுக் கொடுத்து சட்ட சபைகளுக்கு அனுப்பிவிட்டால் கண்டிப்பாய் பார்ப்பன ஆட்சிக்கு வழி ஏற்பட்டு விடுமென்பதில் சந்தேகமில்லை. எப்படியெனில் சென்னை முதல் திருநெல்வேலி வரையிலும் நிறுத்தப்பட்டிருக்கும் கனவான்கள் சற்றேறக்குறைய எல்லோருமே பார்ப்பன ஆதிக்கத்துக்குப் பாடு படுபவர்களும் பார்ப்பன ஆதிக்கத்தில் நசம்மதப்படுபவர்களுமாகவே காணப்படுகிறார்கள். இந்த நிலைமையில் சுத்த ரத்த ஓட்டமுள்ள வரும் சுயமரியாதை உடையவருமான பார்ப்பனரல்லாதார் இதை எப்படிச் சகித்திருக்க முடியும்? என்பது நமக்கு விளங்கவில்லை. கோவை, திருச்சி, தஞ்சை மதுரை திருநெல்வேலி தென்னாற்காடு சென்னை முதலிய ஜில்லாக்கள் ஒவ்வொன்றுக்கும் ஒன்றுக்குக் குறையாத பார்ப்பனரை நிறுத்தி இருக்கிறார்கள். அதாவது ஸ்ரீமான்கள் கோவைக்கு ஸி.வி. வெங்கிட்டரமணய்யங்கார் திருச்சிக்கு ஆர். சேதுரத்தினமய்யர் தஞ்சைக்கு கே. எஸ். வெங்கிட்டராமய்யர் தென் ஆற்காடுக்கு சீனிவாசய்யங்கார் மதுரைக்கு முத்து கிருஷ்ணய்யர் திருநெல்வேலிக்கு சாது கணபதி பந்துலு, மதராசுக்கு மல்லையா முதலிய கனவான்களை நியமித்திருக்கிறார்கள். இந்த கனவான்கள் சென்ற நான்கு ஐந்து வருஷம் காங்கிரசுக்கு ஆக என்ன செய்தார்கள்? எவ்வித தியாகத்தில் ஈடு பட்டவர்கள்? நிர்மாணத்திட்டத்தில் எதில் நம்பிக்கையுள்ளவர்கள்? பகிஷ்காரத்திட்டத்தில் எதை பின்பற்றியவர்கள்? எதை ஒப்புக் கொள்ளுகிறவர்கள்? ஒத்துழையாமையின்போது இவர்கள் எங்கிருந்தார்கள்? வேவஸ்தான மசோதா விஷயத்திலும் குருகுல விஷயத்திலும் இவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள்? குடியானவர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் ஏழைகளுக்கும், இவர்களுக்கும் என்ன சம்பந்தம்? ஆகிய இவைகளைப் பற்றி யோசித்துப் பார்த்தால் எவ்வளவு முட்டாளாயிருந்தாலும் இதன் ரகசியம் விளங்காமல் போகாது. பத்திரிகை செல்வாக்காலும் பணம் கொடுத்து பிரசாரம் செய்வதாலும் பாமர மக்களின் கண்ணைக் கட்டிவிட்டு சட்டசபை ஸ்தானங்களை கொள்ளையடித்துக் கொண்டு போகப் போகிறார்கள். இதைப்பற்றி பார்ப்பனரல்லாத தேசியப் பத்திரிகைகள் ஒரு எழுத்தாவது எழுதுவதில்லை. பார்ப்பனரல்லாத தேசியத் தலைவர்கள் என்போரும் ஒரு வார்த்தையாவது பேசுவதில்லை. நமது பார்ப்பனர்கள் பார்த்து முனிசிபாலிடியில் மகாத்மா படம் தொங்க விட ஜஸ்டிஸ் கட்சியார் அனுமதிக்க வில்லை; என்று ஒருகட்டு கட்டி விட்டால் அதைப்பற்றி சரியாய் விசாரிக்காமல்கூட கங்காதரா மாண்டாயோ கங்காதரா மாண்டாயோ என்று எல்லா பார்ப்பனரல்லாத பத்திரிகைகளும் கூப்பாடு போட ஆரம்பித்து விடுகின்றன. ஆனால் இம்மாதிரி கொடுமைகளைப் பற்றி பேச எழுத பயப்படுகின்றன. என்னசெய்யலாம்; பார்ப்பன ஆட்சியின் ஆதிக்கம் அவ்வளவு வலுவடைந்திருக்கிறது, அவ்வளவு நடுங்கச்செய்கிறது. பார்பனரைப்பற்றி பார்ப்பனரல்லாதார் ஏதாவது சொல்லிவிட்டால்ஏன்சொன்னான், எதற்காகசொன்னான் என்று யோசிக்காமலும் விசாரிக்காமலும் வக்காலத்துவாங்கிக்கொண்டுபார்சுக்குவந்து விடுகின்றன. பார்பனர்கள் சொல்லுவதும், எழுதுவதும் இதுகளின் கண்களுக்குப் புலப்படுவதே இல்லை. ஒவ்வொரு ஜில்லாவுக்கும் நிறுத்தப்பட்டிருக்கும் பார்ப்பனரல்லாத கனவான்களின் பெயரைப்பார்த்தாலோ பார்ப்பனாதிக்கத்திற்காக பார்ப்பனரைவிட ஒரு படி முன்னிற்பவர்களாகப் பார்த்தே நிறுத்தப்பட்டிருக்கிறது. சென்னைக்கும், செங்கல்பட்டுக்கும், வட ஆர்க்காட்டுக்கும், தென் ஆர்க்காட்டிற்கும், தஞ்சைக்கும் திருச்சிக்கும் மற்ற ஜில்லாக்களுக்கும் நிறுத்தப்பட்டவர்கள் யார்? சென்னைக்கு நிறுத்தப்பட்டவர் ஒருவர் தன்னையே பார்ப்பனர் என்று நினைத்துக்கொண்டிருப்பவர் மற்றவர் பார்ப்பனரல்லாதாருக்கு மூளையில்லையென்று சொல்லுபவர் செங்கல்பட்டுக்கு நிறுத்தப் பட்டவரோ! ஸ்ரீமான் எம். கே. அச்சாரியாரை விட ஒரு படி மேல் பட்டவருணாசிரமதர்மி பார்ப்பனர் தலை மேல் தான் உலகம் நிற்கிறதென்று நினைத்துக்கொண்டிருப்பவர். வட ஆர்க்காடோ சொல்ல வேண்டியதில்லை. ஒருவர் அப்புறத்திய ஜில்லாக்காரர் மற்றவர் இப்புறத்திய ஜில்லாக்காரர் அந்த ஜில்லாவுக்கு இதைவிட வேறு அவமானமே வேண்டியதில்லை: இருவரும் பார்ப்பனர் பார்த்து போடு கரணம் என்றால், இதோ போடுகிறேன் எண்ணிக்கொள்ளுங்கள் என்கிறவர்கள்; இதே மாதிரியான ஆட்களைத் தான் மற்ற ஜில்லாக்களுக்கும் போட்டிருக்கிறார்கள். தமிழ் மக்களாகிய நாம் இதைச் சகித்துக் கொண்டிருப்பதா என்றே கேட்கிறோம், இந்த நாட்டு நன்மை தின்மை பெரும்பாலும் யாருக்குச் சேர்ந்தது? சட்ட சபையின் பலாபலனை அனுபவிப்பவர்கள் யார்? யார் வந்து யாரை நிறுத்துவது? சுத்த ரத்தோட்டமுள்ளவர்களுக்கு இதெல்லாம் தோன்ற வேண்டாமா? யாரோ தெருவில் போகிறவன் காங்கிரசென்று சொல்லிக்கொண்டு நம்ம வீட்டிற்குள் புகுந்து எதை எடுத்துக்கொண்டு போனாலும் நாம் கைகட்டிக்கொண்டிருப்பதா? நாம் என்ன பஞ்சபாண்டவர்களாகி விட்டோமா? இன்றைக்கு பஞ்சபாண்டவர்களாகிவிட்டால் நாளைக்கு 'வா'வென்றால் வருமா? இவற்றை நினைத்தால் இரத்தம் கொதிக்கிறதே, நெஞ்சம் குமுறுகிறதே. கேள்வியில்லையா, இதுதானா தமிழ் மக்கள் அறிவு இதுதானா தமிழ்மக்கள் வீரம், வீணை பாட்டிக் கதை பேசுவதில் லாபம் இல்லை. தயவு செய்து விழித்தெழுங்கள் தட்டி எழுப்ப ஆட்கள் வரப்போகிறது. அதாவது:—

"பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையைக்காப்பாற்ற தென் ஜில்லாக்களில் சட்ட சபைத் தேர்தலுக்கு அபேக்ஷகர்களைத் தெரிந்தெடுக்கவும் அவர்களுக்குள் பார்ப்பன சூழ்ச்சியின் பலனால் ஏற்பட்ட அபிப்பிராய பேதங்களை நீக்கி ஒற்றுமைப் படுத்தவும் தேர்தலுக்கு நிறுத்தப்பட்ட அபேக்ஷகர்களுக்கு பார்ப்பனரல்லாதார் கட்டுப்பாடாய் ஓட்டுச் செய்து தேர்தல்களில் வெற்றி பெறச் செய்யவும் பார்ப்பனரல்லாத பிரமுகர்களான ராமநாதபுரம் ராஜா, ஸ்ரீமான்கள் உதமபாளையம் சுப்பிரமணிய முதலியார் திருநெல்வேலி மார்த்தாண்டம் பிள்ளை முதலியவர்கள் இம்மாதத்திற்குள் சுற்றுப்பிரயாணம் வரப்போகிறார். பனக்கால் ராஜாவும் வருவார். ஆதலால் ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் வரப்பட்டவர்களை வரவேற்று அங்கங்குள்ள நிலைமையை நன்றாய் விளக்கி இப்பிரமுகர்கள் மூலம் பாமர ஜனங்கள் உண்மை நிலைமையை அறியும்படி செய்து நம்மவர்கள் சுயமரியாதையைக் காப்பாற்றப்படும் படியாக உதவி செய்ய வேணுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

## தேர்தல் படிப்பினை.

இவ்வாரம் சென்னையில் நடந்த முனிசிபல் தேர்தல்களில் பார்ப்பனர் கட்சிக்கு இரண்டு ஸ்தானங்களும், பார்ப்பனரல்லாத கக்ஷிக்கு ஒரு ஸ்தானமும், இரண்டு கட்சிக்கும் பொதுவான கக்ஷி என்கிற சுயேச்சைக் கட்சி என்பாருக்கு ஒரு ஸ்தானமும், கிடைத்திருக்கிறது. பொதுப்படக் கூறும்போது ஜஸ்டிஸ் கட்சிக்கு சென்ற மாத தேர்தலில் ஜயம் கிடைத்ததுபோல் பூரண ஜயம் கிடைக்கவில்லை என்றே சொல்ல வேண்டும் இப்பூரண ஜயம் பெறாததற்கு காரணம் ஜஸ்டிஸ் கட்சியாரின் அளவுக்கு மீறின நம்பிக்கையே அல்லாமல் பார்ப்பனக் கட்சியின் சாமர்த்தியமும் செல்வாக்கும் அல்லவே அல்ல. அம்மன் கோவில் வார்டில் ஜயம் பெற்ற சுயேச்சைக் கட்சி என்று சொல்லிக் கொண்டவராகிய டாக்டர் ஆசிர்வாத நாடார் தான் பார்ப்பனரல்லாதார் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவன் என்றும், பார்ப்பனக்கட்சியாகிய சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்தவன் அல்லவென்றும் தன்னையே ஜஸ்டிஸ் கட்சி அபேக்ஷகராய் நிறுத்தும்படியும் எவ்வளவோ தூரம் கேட்டுக் கொண்டும் ஜஸ்டிஸ் கட்சியார் கவனியாமல் ஒரே கட்சிக்கு இருவரை நிறுத்தியது போல் நடந்து கொண்டது ஒரு பிசகு என்றே சொல்லுவோம். அல்லாமலும் ஸ்ரீமான் ஆசிர்வாத நாடார் ஒரு சமயம் ஏதாவது ஒரு விஷயத்தில் ஜஸ்டிஸ் கட்சி அபிப்பிராயத்தில் மாறுபட்டாலும் எந்த விதத்திலும் பார்ப்பனர் கட்சியில் சேரவோ அவர்கள் கைப்பிள்ளையாய் இருக்கவோ ஒருக்காலும் உடன்படமாட்டார் என்பது உறுதி. ஆதலால் டாக்டர் நாடார் வெற்றி எவ்விதத்திலும் பார்ப்பனர் கட்சிக்கு அனுகூலம் இல்லையென்றே சொல்லுவோம். நிற்க, ஆர்பர் டிவிஷனில் பார்ப்பனர் கட்சிக்கு போட்டியாய் இரண்டு நபர்களை நிறுத்தியதும் ஜஸ்டிஸ் கட்சியாரின் யோசனைக் குறைவென்றே சொல்லுவோம். பார்ப்பனருக்கு எதிராக 200 பேருக்கு மேல் ஓட்டு செய்தும் அது பாகமாய் பிரிந்ததால் 138 ஓட்டுகள் மாத்திரம் கிடைக்கப்பட்ட பார்ப்பனர் கட்சி ஆசாமிக்கு வெற்றி கிடைக்க இடமேற்பட்டு விட்டது. இதுபோல்தான் இந்தியா சட்டசபைக்கு சென்ற தேர்தலில் இரண்டு பார்ப்பனரல்லாதார் நின்றதால் ஸ்ரீமான் யம். கே. ஆச்சாரியாருக்கு சுலபமாய் வெற்றி கிடைக்க இடமேற்பட்டது. இது தெரிந்திருந்தும் இம்மாதிரி செய்ததாலும் பார்ப்பனக்கட்சியின் ஆட்சியை சரியானபடி அந்தவார்டில் ஓட்டர்களுக்கு எடுத்துச் சொல்லாததாலும் பார்ப்பனர் தங்களுக்கு வெற்றி என்று சொல்லிக்கொள்ள இடமேற்பட்டுவிட்டது. திருவல்லிக்கேணி வார்டில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரிகளுக்கு வெற்றி ஏற்பட்டதில் நமக்கு அதிசயம் ஒன்றும் இல்லை ஏனெனில் ஆயிரத்துச்சில்லரை ஓட்டர்களில் 800 த்துச் சில்லரை ஓட்டர்கள் பார்ப்பன ஓட்டர்கள், அந்தவார்டில் ஒரு பூணூல் போட்ட மாக்கட்டையை நிறுத்திவிட்டாலும் அதற்கெதிரிடையாய் மகாத்மா காந்தி வந்து நின்றாலும் ஒரு பார்ப்பன ஓட்டுக்கூட கிடைக்காது. ஆதலால் அந்த வார்டுக்கு ஜஸ்டிஸ் கட்சிக்காரர் அபேக்ஷகரை நிறுத்தாமல் இருந்தது புத்தி சாலித்தனமென்றே சொல்லுவோம். அமீர் மகால் வார்டில் ஜஸ்டிஸ் கட்சியைச்சேர்ந்த ஸ்ரீமான் ரங்கராமானுஜத்திற்கு வெற்றி கிடைத்திருக்கிறது. மொத்தத்தில் ஐந்து ஸ்தானங்களில் பார்ப்பனர் கட்சிக்கு இரண்டு ஸ்தானம் கிடைத்து விட்டது. இதை யோசிக்கும் போது நமது நாட்டில் இன்னமும் எந்தவிதத்திலேயோ பார்ப்பனர் சூழ்ச்சிக்கு இடமிருக்கிறதென்றே சொல்லியாகவேண்டும். ராயப்பேட்டை டிவிஷன் தேர்தல் சட்டசம்பந்தமான ஆக்ஷேபணையினால் ஜஸ்டிஸ் கட்சிக்குவெற்றி யேற்பட்டால் அதை நாம் வெற்றியாகக் கருதக்கூடாது. அந்த விஷயம் கோர்ட்டு மூலம் மறுபடியும் தேர்தலுக்கு வந்து பொது ஜனங்களிடையும் ஓட்டர்களிடையும் பார்ப்பன ஆட்சியை நன்றாய் எடுத்துச்சொல்ல சந்தர்ப்பம் கிடைக்கவேண்டுமென்றே கோருகிறோம். இந்த ஒரு விஷயத்தை முக்கியமாய் உத்தேசித்தேதான் நாமும் தேர்தல் பிரசங்கங்களில் கலந்து கொள்ள ஆசைப்படுகிறோம். எப்படியாவது பார்ப்பன சூழ்ச்சியை வெட்டிப் புதைக்கிற வரையில் நமக்கு எத்தினை தோல்வி வந்தாலும் கூட நாம் அதைப்பற்றி மனம் தளரக் கூடாது. உலகம் இன்றோடு முடிவடைந்து விடப்போகிறதில்லை. ஆதலால் பந்து அடிக்க உயரமாய்க் கிளம்புவது போல் அளவுக்கு மிஞ்சின நம்பிக்கையில் இருந்தும், மமதையில் இருந்தும் தட்டி எழுப்ப இம்மாதிரி சிறு சம்பவங்களை மனப்பூர்வமாய் வரவேற்கிறோம்.

## மதிப்புரை.

மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், என்னும் புத்தகம் ஒன்று நமது பார்வைக்கு வந்தது. அதை எழுதிய ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்களைப் பற்றி நாம் தமிழ் நாட்டிற்கு அறிமுகம் செய்துவைக்க வேண்டியதில்லை. ஸ்ரீமான் முதலியாரவர்கள் சிறந்த தமிழறிஞர். காந்தியடிகளிடத்து அழுத்தமான பற்றுள்ளங் கொண்டவர்.

பாரத நாட்டை ஐரோப்பிய நாகரிக நாடாக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்யும் இக்காலத்தில் இந்நூலுக்கும் இதைப்போன்ற பிறவற்றிற்கும் பொது ஜனங்களிடத்தில் செல்வாக்கு உண்டாதல் துர்லபந்தான் எனினும் ஜட நாகரிக இருட் கடலில் தத்தளித்து உய்யும் வகை காணாது ஏக்கமுறுங்கால் இப் போக்குடைய நூல்கள் பெறுதற்கரிய தெப்பங்களாக விளங்குமென்பதிலைய மில்லை. கூர்ஜர நாட்டுப் பெரியார் தமிழ் நாட்டுச் சைவ, வைணவ சமயாசாரியர்களாயிலங்கும் உண்மையை வெளிப்படுத்திய பெருமை நமது முதலியாரவர்களுக்கே உரியது. காந்தியடிகள் தம் வரலாற்றைத் தாமே சுயமாக எழுதி வருகின்றார் இந்நூல் காந்தியடிகளுடைய வாழ்க்கையால் உணரக் கிடக்கும் நுண்மையான உண்மைப் படிப்பினையை பலதிறப்பட்ட மேற்கோள்களுடன் அறிவுறுத்துகின்றது. அயல்நாட்டவராட்சியால் இக்காலத்தில் கட்டுத்திட்டமின்றி எல்லாரும் நூலாசிரியர்களாக வெளிவருகின்றார்கள். சிலர் சிறிது ஆங்கிலங் கற்ற பலத்தால் "நாவல்"கள் என்ற பெயருடன் பல ஆபாசமான நூல்கள் வெளியிட்டு நமது மக்களை "டம்பாசாரிகளாகவும் பெண்களை காமப் பொருளாக எண்ணவும் மிருகத் தன்மை வாய்ந்த காம தூர்த்தர்களாகவும் செய்து நாட்டைப் பாழ்ப்படுத்தி வருகின்றனர். தற்காலத்தில் இவற்றிற்கே செல்வாக்கும் அளவு கடந்திருக்கிறது. துப்பறியும் நாவல்களென்றும் வாழ்க்கை நலம் புகட்டும் புதுமைகளென்றும், இரகசிய இரத்தினமென்றும் பெயர் கொண்டு சிறப்பாக நமது நாட்டுக்கும் பொதுவாக மக்கள் ஒழுக்கத்திற்கும் ஆபத்துத் தரக்கூடிய மேல் நாட்டு நாகரிகத்தைக் காட்டுத் தீப்போல் பலவத்தமாகப் புகுத்துகின்றன.

முற்காலத்து மன்னராதரவில் நடைபெற்ற அரங்கேற்ற முறை இக்காலத்தில் இன்மையே இவ் வழிகளுக்கு ஒரு காரணமென்றுஞ் சொல்லலாம். இந்நூலில் மக்கள் மாக்கள் தன்மையும், இன்ப வாழ்க்கை இன்னது என்பதும், அதை அடையுமாறும், அவ் வாழ்க்கை நெறிபுணர்ந்து அது பற்றி யொழுகும் பெரியார் காந்தியடிகளே என்பதும், கைம்மாறு கருதாது கடமையைச் செய்கின்றவர் கடவுள் தன்மை பெறுவரென்பதும், சத்தியாக்கிரகத்தின் பெருமையும், சுதேசியம், சுயராஜ்யம் இன்ன என்பதும் பிறவும் கவிச்சுவை நிரம்பிய எளிய இனிய செந்தமிழ் நடையில் ஆக்கப்பட்டுள்ளது இந் நூல் ஆடவர், பெண்டிர் ஆகிய இருதிறத்தாரும் படித்தற்குரியது. நூலின் முதற்கண் இளங்கோவடிகளின் அறவுரை அறன் வலியுறுத்தலும், இறுதியில் காந்தியடிகளை வழுத்திய "இன்பப்பேறு" பயனாக நிற்றலும் ஊன்றி நோக்கி மகிழ்தற்குரியன. சுருங்கக் கூறுமிடத்து காந்தியடிகளால்வெளியிடப்படும் 'யௌவன இந்தியா' பத்திரிகையை விடாமல் படித்துணரும் பலன் இவ்வரிய ஒரு நூலே ஒரு முறை ஆராய்ச்சியில் கொடுத்து விடும் என்பதில் ஐயமில்லை. நல்ல தாளில் முத்துப்போன்ற எழுத்துக்களால் பிழையறப் பதிப்பிக்கப்பட்டு 512பக்கங்கொண்டு தக்க வடிவத்தில் அழகிய உறுதியான கட்டடமமைந்த இந் நூலுக்குள்ள விலை ரூ2-ம் மிகக் குறைந்ததென்றே மதிக்கிறோம். தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் இந் நூலை வாங்கிப்படித்துப் பயனை பெற்று ஸ்ரீமான் முதலியாரவர்களை இம்மாதிரி முயற்சிகளில் மேன்மேலும் இறங்கும்படி ஊக்குமாறு வேண்டுகிறோம்.

இப்புத்தகம் கிடைக்குமிடம்
முருக வேள் புத்தகசாலை,
ராயப்பேட்டை,
சென்னை.

## கும்பகோணத்தில் பார்ப்பன ஆதிக்கம்.

கும்பகோணத்திற்கு மகாகனம் சீனிவாச சாஸ்திரிகள் சென்றதற்கு அங்குள்ள பார்ப்பனர் வரவேற்று உபசாரப்பத்திரம் படித்து அவரைக் கொண்டு பலபார்ப்பனர் படங்களைப் பொது ஸ்தாபனங்களில் திறக்க வைத்தார்களாம். ஸ்ரீமான்கள் எஸ். கஸ்தூரி ரங்கய்யங்கார், எஸ். அப்புசாஸ்திரி, ஆர். சாமிநாதய்யர், முதலிய 'பெரியார்கள்' படம் திறக்கப்பட்டதாம். பார்ப்பன ஆதிக்கச்சங்கமாகிய இந்திய ஊழிய சங்கத்திற்கும் பணம் கொடுக்கப்பட்டது. பார்ப்பனரல்லாதார் யாராவது அங்கு போனால் மீட்டிங்கு கூட்டக்கூட இடமில்லாமல் உபத்திரவிக்கிறார்கள் உதாரணமாக சென்ற மாதம் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் கும்பகோணம் போயிருந்தபோது நாகேசுவர சுவாமி கோவிலில் மீட்டிங்கு கூட்ட ஒரு டிரஸ்டியைக் கேட்டு உத்திரவு வாங்கி மீட்டிங்குக்கு நோட்டீஸ்போட்டிருக்க மீட்டிங்கு சமயத்தில் ஒரு பார்ப்பன டிரஸ்டி தடுத்து விட்டார். மீட்டிங் குவேறுஇடத்தில் போட வேண்டி வந்தது. இவ்வைத்துமாதத்தில் நாலைந்து அரசியல் கூட்டம் அக்கோவிலுக்குள் பார்ப்பனர்களால் கூட்டப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் இது மாத்திரம் கூடாதென்று சொல்லி விட்டார்கள். மற்றும் காங்கிரசுக்காக உழைத்து இரண்டு மூன்று தடவை ஜெயிலுக்குப்போன Dr. வரதராஜுலு நாயுடுகார் போன்றவர்களைக் காங்கிரசை விட்டு நீங்கும் படி கண்டனத் தீர்மானங்களும் செய்தார்கள். இனியாவது இந்த ஜில்லாப் பார்ப்பனரல்லாதாருக்கு சுயமரியாதை ஏற்பட்டு வரப் போகும் தேர்தல்கள் மூலம் பார்ப்பனாதிக்கத்தை ஒழிப்பார்களா?

---

## தென்னாட்டுத் தலைவர்கள் சுற்றுப் பிரயாணம்.

வரப்போகும் சென்னை சட்டசபைத்தேர்தலுக்கும் இந்தியா சட்டசபைத்தேர்தலுக்கும் அபேக்ஷகர்களை நிறுத்துவதற்கும் பார்ப்பனரல்லாத அபேக்ஷகர்களுள் ஒருவருக்கொருவரிடம் உள்ள தகராறுகளை சரிப்படுத்துவதற்கும் தென்ஜில்லாக்களில் ஆங்காங்கு பார்ப்பனரல்லாதார் ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதற்கும் கனம் ராமநாதபுரம் அரசர் ஸ்ரீமான் கனம் உத்தமபாளையம் எம். டி. சுப்ரமணிய முதலியார், பி. என். மார்த்தாண்டம் பிள்ளையாகிய மூவரையும் தென்னாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்து வருமாறு கனம் பனகால் அரசர் வேண்டிக்கொண்டுள்ளார். அவரும் இம்மாதத்திற்குள்ளாகவே தென் ஜில்லாக்களுக்கு விஜயம் செய்வார். சுற்றுப் பிரயாணக்குறிப்பு சீக்கிரத்தில் வெளியிடப்படும்.

தென்னாட்டிலுள்ள பார்ப்பனரல்லாத கக்ஷியைச்சேர்ந்த ஒவ்வொருவரும் மேற்சொன்ன கனவான்களுடன் ஒத்துழைத்து நம்ம கட்சியைச் சேர்ந்தவர்களே அதிகப்படியாய் சட்ட சபைக்கு வரும்படி தக்க உதவி புரியுமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்

பி. டி. ராஜன்.

## பாலக்காடு கவுன்சில் எலக்ஷன் போட்டியும் தரகர் மத்தியஸ்தமும்

பாலக்காடு நகர பரிபாலன சபையின் பெரியகடை வார்டுக்கு ஸ்ரீமான்கள் ஆர். வெங்கட்ராமகவுண்டர், ஆர். எஸ். பேச்சியப்ப செட்டியார், சங்கு தரகர், சுப்பிரமணிய மூத்தார். ஆகிய நால்வர்களும் அபேக்ஷகர்களாக நின்றதில் முதல் இரண்டு கனவான்களுக்கும் போட்டி அதிகப்பட்டதில் வாக்காளர்களுக்கு அதிக கஷ்டமாயிருந்தது அபேக்ஷகர்களில் இரண்டு கூட்டத்தாரும் தெருவில் எலெக்ஷன் வேலை செய்துவரும் போது ஸ்ரீமான் ப. சு. பழனியப்பன் அவர்களால் நடத்தப்பட்ட பாகவதப்பிரசங்கம் நடைபெறுமிடத்திற்கு இரண்டு கூட்டமும் வந்து சேர்ந்தது ஸ்ரீமான் தரகரவர்கள் இரு கூட்டத்தாருக்கும் தகுந்த சமாதானம் சொல்லி ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொள்ளாமல் ஒருவர் கேட்டுக்கொள்ள ஒருவர் பின்வாங்க வேண்டுமென்று தீர்ப்புச் சொன்னார். ஸ்ரீமான் கவுண்டர் கேட்டுக்கொள்ள செட்டியார் பின்வாங்கினார். ராமன் செட்டியார்.

---

## இரண்டு ஆசார சீர்திருத்தத் திருமணங்கள்.

கும்பகோணம் நாயுடு மகாஜன சங்கம் பொக்கிஷதார் திருவாளர் ஆர். ராஜகோபால நாயுடு அவர்கள் குடும்பத்தில் ஒரு திருமணமும், கும்பகோணம் நாயுடு குலமக்களில் முக்கியஸ்தர்களில் ஒருவராகிய திருவாளர் டாக்டர் க. வீ. கண்ணய்யா நாயுடு அவர்கள் குடும்பத்தில் ஒரு திருமணமும் ஆக இரண்டு திருமணங்களும் கும்பகோணத்திற்கடுத்த திருநாகேஸ்வரத்திலுள்ள ஸ்ரீ சீனிவாசப்பெருமாள் சன்னதியில் 26-8-1926 வியாழக்கிழமைய தினம் வெகு விமரிசையாக நடைபெற்றன. உறவினரும் நண்பர்களுமாக சுமார் ஆயிரம் ஜனங்கள் வந்திருந்தனர். இரண்டு திருமணங்களும் பார்ப்பன புரோகிதரில்லாமல் இரண்டு ஆழ்வார் (சாத்தாத குலம்) புரோகிதர்களைக் கொண்டு நடத்தப்பட்டன. வந்திருந்தவர்களில் பெரும்பாலோர் இவ்வேற்பாட்டை முழு மனதுடன் ஆமோதித்தது குறிப்பிடத் தக்கது. திருமணத்தை கோவிலின் உள் பிராகாரத்தில் பார்ப்பனர்கள்மட்டும் தான் செய்யலாமென்றும் மற்றவர்கள் வெளிப் பிராகாரத்திலிருக்கும் மண்டபத்தில் தான் செய்யவேண்டுமென்று கோவில் அய்யங்கார் மணியக்காரர் சொன்னதற்கு, வந்திருந்தவர்களில் முக்கியஸ்தர்கள் நாங்களும் உள்பிராகாரத்தில்தான் செய்யப் போகிறோம். உங்களால் ஆனதைப் பார்த்துக் கொள்ளலாமென்று சொன்னவுடன் மணியக்கார அய்யங்கார் உங்களிஷ்டப்படி, செய்யுங்களென்று சம்மதம் கொடுத்து விட்டுப்போய் விட்டார். திருமாங்கல்ய தாரணம் ஆனவுடன் கும்பகோணம் நாயுடு மகாஜன சங்கத்திற்கு இரண்டு மாப்பிள்ளை பெண் வீட்டாரிலும் நன்கொடைகள் அளிக்கப்பட்டன. நாயுடு குல மக்கள் இப்

## ஈரோடு தாலூக்கா தேவஸ்தான கமிட்டி மீட்டிங்.

ஈரோடு தாலூக்கா தேவஸ்தான கமிட்டி மீட்டிங் 31—8—29 தேதி பகல் 2மணிக்கு கமிட்டி பிரசிடெண்ட் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் தலைமையில் கூடிற்று. ஆஜர் மெம்பர்கள் ஸ்ரீமான்கள் ஈங்கூர் ராமசாமிக் கவுண்டர், பூந்துறை துரைசாமிக் கவுண்டர், கீம்புளியம்பட்டி ரங்கைய்ய கவுண்டர், அ. சுந்திரமுதலியார் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் ஆகிய கமிட்டிமெம்பர்கள் ஆஜரிலிருந்தார்கள். முதலாவதாக தேவஸ்தான போர்டாரிடமிருந்து ஈரோடு தாலூகா கமிட்டியைக்கலைத்துவிட்டு பல தாலூகாக்களைச் சேர்த்து ஒரு கமிட்டியாய் நியமிப்பதற்கு ஏதாவது ஆக்ஷேபணை உண்டா என்று கேட்கப்பட்டு வந்த நோட்டீசைப்பற்றி யோசிக்கப்பட்டு அந்தப்படி ஈரோடு தாலூகா கமிட்டியுடன் மற்ற தாலூகாக்களை சேர்க்கக்கூடாது என்றும் ஈரோடு கமிட்டி மாகாணத்தில் உள்ள மற்ற எல்லாக் கமிட்டியைவிட நன்றாய் வேலை செய்துவந்திருப்பதாய் போர்டாரே புகழ்ந்திருப்பதாகவும், மற்ற கமிட்டி இதனுடன் சேர்க்கப்பட்டால் ஒழுங்காக வேலை நடக்காதென்றும், அப்படி மீறி ஏதாவது சேர்ப்பதாயிருந்தால் பவானி தாலூகா மாத்திரம் சேர்த்தால் குற்றமில்லை என்றும் தாராபுரம் தாலூகாவை இத்துடன் சேர்ப்பதாயிருந்தால் கண்டிப்பாய் ஒழுங்காய் வேலை நடக்காது என்றும் தெரிவிப்பதாக தீர்மானிக்கப்பட்டது. சிவகிரி தேவஸ்தானத்திற்கு தற்கால ஏற்பாடாய் நியமித்திருந்த ஸ்ரீமான் ராமசாமிக் கவுண்டருக்குப் பதிலாக குமாரவேலப்ப கவுண்டரை டிரஸ்டியாக நியமிக்கப்பட்டது.

சென்னிமலை தேவஸ்தான அர்ச்சகர்கள் தர்மகர்த்தா உத்திரவுக்கு கீழ்ப்படியாததால் அவர்கள் மேல் கோர்ட்டில் நடவடிக்கை நடத்த அனுமதி கோரி தர்மகர்த்தா மகா-௱-ஸ்ரீ செங்கோட்டுவேல கவுண்டர் கேட்டுக்கொண்டபடி அனுமதி கொடுக்கப்பட்டது.

---


## தேவாஞ்சனம்.

சீசா 1-க்கு விலை ரூ. 1—0—0

நித்தியானந்தர் பிரபல கைவல்ய சஞ்சீவி தேவாஞ்சனம் மேல் மூலம் தேய்ப்பதால் கொடிய ரோகங்களை உடனே நீக்கி குணப்படுத்தும். பேட்டலாக் மருந்துடன் அனுப்பப்படும். சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை யுண்டாகும், 13 வகை ஜன்னி, சீதம், மாந்தவலிப்பு, கை கால் மதமதப்பு, பச்சவாதம், பாரிச வாய்வு, அண்டவாதம். மேகவூறல் வண்டு கடி, முதலிய சகல வியாதிகளைக் கண்டித்து அதி சீக்கிரம் குணமாக்கும். வி. பி. பிரத்தியேகம்.

க. அ. நாராயணசாமி பண்டிதர்,
கிருபாநிதி வைத்தியசாலை,
திருச்செங்கோடு, தென் இந்தியா.


---

பக்கங்களில் மூன்று நாட்கள் திருமணங்கள் நடத்தி பொருளை அனாவசியமாக செலவழிப்பதே வழக்கமாக இருக்க இத் திருமணங்களிரண்டும் ஒரேநாளில் முடிவு பெற்றது என்று ஆர். சி. வெங்கட்டராம நாயுடு எழுதுகிறார்.

## வைப்பாட்டிக் கதை.

சென்னையில் ஒரு பொதுக் கூட்டத்தில் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் பார்ப்பனர் கோரும் சுயராஜ்யம் வந்து விட்டால் பார்ப்பனரல்லாத ஸ்ரீகளை பார்ப்பனர் தங்களுக்கு வைப்பாட்டிகளாக இருக்க வேண்டும் என்று சட்டம் செய்து விடுவார்கள் என்று சொன்னதாகவும்? அது பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கே அவமானமாய் விட்டதாகவும், ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் ஒரு கூட்டத்தில் நீலிக்கண்ணீர் விட்டார் இதைப் பார்த்து அவரது இரண்டொரு பார்பனரல்லாத சிஷ்யர்களும் பின் பாட்டுப் பாடி தங்கள் சமூகத்திற்கு அவமானம் ஏற்பட்டு விட்டதாக கூலி மாரடித்துக் கொண்டார்கள் இவர்கள் உண்மையிலேயே நாயக்கர் சொன்னதற்காக மாரடித்துக் கொண்டார்களா அல்லது அய்யங்காரின் உப்புக்காக மாரடித்துக்கொண்டார்களா? என்பதைக் கவனிப்போம். பார்ப்பனரல்லாதார் ஸ்ரீகளைப் பார்ப்பனர்கள் வைப்பாட்டிகளாக இருக்க சட்டம் செய்து விடுவார்கள் என்று சொன்னதில் என்ன தப்பு. இதற்கு முன்னமே அந்த சட்டம் அமுலில் இருக்கிறதை இவர்கள் அறிந்தும் இன்றுதான் இதை நாயக்கர் சொல்லக் கேட்டவர்கள் போல் பாசாங்கு செய்கிறார்கள். இந்து உலகத்தில் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாத இந்துக்களுக்கு என்ன பெயர் கொடுத்திருக்கிறார்கள் : இந்துவாயிருந்தால், பிராமணன் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரன்—பஞ்சமர் என்கிற ஐந்து வகுப்பில்தான் சேரவேண்டும் “கலியுகத்திலோ க்ஷத்திரியரும் வைசியரும் இல்லை’, என்கிறார்கள். ஓட்டல்களிலும் பிராமணன் சூத்திரன் என்றுதான் எழுதுகிறார்கள் ஆதலால் மீதி இருப்பது பிராமணன், சூத்திரன், பஞ்சமன், ஆகிய மூன்று வகுப்பார்கள். இதில் பார்ப்பனர் தவிர மற்றவர்கள் தங்களை பிராமணர் என்று சொல்லிக்கொள்ள முடியாது. அய்யங்கார் சிஷ்யர்களோ, தங்களைப் பஞ்சமர்கள் என்றும் சொல்லிக்கொள்ள மாட்டார்கள். ஆகவே இவர்கள் சூத்திரர் என்பதை மறுக்க முடியாது சூத்திரன் என்றால் யார்? இந்து மதத்திற்கும் வருணாசிரமத்திற்கும் ஆதாரமான மநு தர்ம சாஸ்திரம், எட்டாம் அத்தியாயம் 415, 417-வது சுலோகங்களில் சூத்திரன் என்றால் தேவடியாள் மகன் என்றும், வைப்பாட்டி மகன் என்றும், எழுதியிருப்பதோடு இவர்கள் வசமுள்ள பொருள்களை பலாத்காரமாகவும் பார்ப்பனர் எடுத்துக் கொள்ளலாம் என்றும், நமது பின் சந்ததிகளையும் கட்டுப்படுத்தும்படி எழுதி வைத்திருக்கிறார்கள். இது ஏன் நமது நாட்டில் சிலபாகத்தில் மாத்திரம் அமுலில் இல்லை என்றால், பார்ப்பனர் கோரும் சுயராஜ்யம் இல்லாததால் தான் என்கிற பொருள் கொண்டே அன்று சொன்னோம். என்றும் உறுதியாய்ச் சொல்லுவோம். ஆனால் சிலபாகத்தில் இன்னமும் அமுலில் வைத்துக் கொண்டும் நமது சகோதரிகளை தங்கள் வைப்பாட்டிகளாக்கிப் பிள்ளைகள் பெற்று உலகத்திலுள்ள ஓட்டல்களுக்கும் காப்பிக் கடைகளுக்குமெல்லாம் எச்சில் எடுக்கவும், எச்சில் கிண்ணம் கழுவவும் அடிமைகளை விநியோகித்துக்

## சிக்கல் பொருள் வைத்த சேரி செங்குந்தர் மகாஜன சபை.

தஞ்சாவூர் ஜில்லா நாகபட்டணம் தாலூக்கா சிக்கல் பொருள் வைத்த சேரி செங்குந்தர் மகாஜன சபையில் அக்ஷய-ஞு ஆவணி மீ 10-ந் உ க்குச்சரியான 1926-ஞு ஆகஸ்டு மீ 26-ம் உ. பகல் 3-மணிக்கு ஷை சபையில் கூடிய மாபெருங் கூட்டத்தில் நாகப்பட்டணம் ஜவுளி வியாபாரம் தாலூக்கா போர்டு மெம்பரும் முனிசிபல் கவுன்சிலருமான உயர் திருவாளர் அ. ந. அருணாசல முதலியாரவர்களின் தலைமையின் கீழ் தஞ்சை ஜில்லா செங்குந்தர் மகாநாடு நடைபெறவேண்டிய தற்கான விஷயங்களைப் பற்றியும் மகாநாட்டுக்கு தலைவர் தேர்ந்தெடுக்கும் விஷயங்களைப் பற்றியும் வரவேற்புக் கமிட்டித் தலைவர் தேர்ந்தெடுப்பதைப் பற்றியும் நாகப்பட்டணம் முனிசிபல் எலக்ஷனில் போட்டியன்றியில் வெற்றி பெற்ற ஸ்ரீமான் உயர் திருவாளர் ரு. மு. நாகரத்தின முதலியார் தாலூக்கா போர்டு மெம்பர் 1. உயர் திருவாளர் ஸ்ரீமான் கா. காளிமுத்து முதலியார் அவர்கள் பெஞ்சு மாஜிஸ்டிரேட் அவர்களின் குமாரர் உயர் திருவாளர் கா. கா. நல்லமுத்து முதலியார் அவர்கள் 2. இவர்கள் இருவர்களுக்கும் நாகப்பட்டணம் 8, 9, வது வார்டுகளில் வெற்றியடைந்த விஷயங்களை விஸ்தாரமாக உயர் திருவாளர் சொ. ச. கந்தசாமி முதலியார் அவர்களால் சொற்பொழிவு நிகழ்த்திய பின் கா. கா. நல்லமுத்து முதலியார் அவர்களால் வரவேற்பு கழகத்தலைவர் அ. ந. அருணாசல முதலியார் அவர்களையே தேர்ந்தெடுக்கவேணு மென்று பிரேரேபிக்கப் பெற்று, ரு. மு. நாகரெத்தின முதலியார் அவர்களாலும் மஞ்சட் கொல்லை ஷாப்புக் கடை வியாபாரம் திரு. விநாயகமூர்த்தி முதலியார் அவர்களாலும் உயர் திரு. ரு. ம. ச. ருமசாமி முதலியார் அவர்களாலும் ஆதரிக்கப்பெற்று கரகோஷத்தினிடையே மேற்படி அ. ந. அருணாசல முதலியார் அவர்களையே தேர்ந்தெடுக்கப்பட்டது. மகாநாடு அக்டோபர் மீ 2-ந் தேதி 3-ந் தேதி சனி ஞாயிறு களில் நடத்துவதென்றும் மகாநாட்டின் தலைவர் தெரிந்தெடுக்க ஒரு கமிட்டியும் நியமிக்கப்பெற்று மாலை ஐந்தரை மணிக்கு சந்தன தாம்பூலம் வழங்கப் பெற்று கூட்டம் இனிது நிறைவேறியது. காரியதரிசி, சொ. ச. கந்தசாமி முதலியார் அவர்கள் 1—9—26 தேதி முதல் மகாநாட்டிற்காக பொருளிட்டும் நிமித்தம் வெளியூர்களுக்கு புறப்பட்டிருக்கிறபடியால் அவர்களை தாமதிக்காதபடி செங்குந்த மரபினர் யாவரும் தம் தம் கடமை என பொருளை கொடுத்துதவும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்

செங்குந்தர் மகாஜன சங்க தலைவர்,

செ. நமசிவாய முதலியார்.

கொண்டுதான் வருகிறார்கள். இதனால் இந்த சிங்கங்களுக்கு மானக்கேடு வரவில்லையா; அந்த சகோதரிகள் இவர்களுடைய சகோதரிகள் அல்லவா; கிராமத்து ஜனங்கள் இந்தியன் பினல் கோட் சட்டத்தைப்பற்றி வேடிக்கையாய்ப் பேசிக் கொள்வார்கள் அதாவது ஒரு மனிதனை ஒரு மனிதன் செருப்பாலடிப்பதாய்ச் சொன்னால் ஆறு மாதம் தண்டனை அடித்து விட்டால் ஒரு மாதம் தான் தண்டனை என்பார்கள் (அதென்னவென்றால் அடித்தால் அது அசால்ட்டு குற்றமாய் விடுகிறதாம். சொன்னால் அது மான நஷ்டக் குற்றமாகி விடுகிறதாம்) அது போல் நமது சகோதரிகளை வைப்பாட்டிகளாய் வைத்துக் கொண்டிருப்பவர்கள் மேல் கோபமில்லாமல் அவர்கள் பின்னால் திரிந்து வயிறு வளர்த்துப் பெருமை பெற்றுக் கொண்டு இக் கொடுமையை வெளியிலெடுத்துச் சொன்னவன் மேல் கோபப்படுவதானால் இந்த சிப்பாய்களின் கோபத்தின் மதிப்பென்ன? என்பதை வாசகர்கள் தான் உணரவேண்டும். சட்ட சபையில் மலையாளக் குடிவார மசோதாவைப் பற்றி ஸ்ரீமான் கே. வி. ரெட்டி அவர்கள் பேசும் போது நமது பெண்கள் ருதுவானால் அவர்களை முதல் முதல் பார்ப்பனர் தான் புணர வேண்டும் என்கிற சட்டம் மலையாள நாட்டில் அமுலில் இருக்கிறது என்று சொன்னாரே அதைக் கேட்ட போது இந்த வீரர்களுக்கு மானக்கேடு ஏற்படவில்லையா, என்று நாம் கேழ்க்கிறோம் இந்த சிப்பாய்களை பார்ப்பனர் காசும் பார்ப்பனர் தயவும் இன்னம் என்ன என்ன செய்யச் சொல்லும் என்பதை பொறுமையுடன் கவனிப்போம்.

## பவானி கிராமம் பஞ்சாயத்து கோர்ட்டும் நீதி பரிபாலனமும்.

இந்த பஞ்சாயத்து கோர்ட்டில் 1920-ஞு மத்திய 2-வது ஆக்டு 15-வது பிரிவுக்கு விரோதமாயும் ஷை ஆக்டு 3-ம் அத்தியாயம் 3-ம் பிரிவுக்கு விரோதமாயும் கிராமக் கோர்ட்டுக்கு அதிகாரப் பிரதேச எல்லைக்கு வெளியில் வாசம் செய்யும் பிரதிவாதிகளின் பேரிலும் கையெழுத்துப் போட்ட எழுத்து மூலமான சம்மதியுடன் உடன்படிக்கை யில்லாமல் பூமிகள் விஷயத்திலும், வீட்டு வாடகை விஷயத்திலும்) தாவாக்களை ஏற்றுக் கொண்டு தீர்மானிக்கப்பட்டிருக்கிறார்கள். இது கவர்ன்மெண்டு சட்டத்துக்கு விரோதமான செய்கைகளாகையால் எழிய பிரதிவாதிகளிட அபீல்களை எதிர் பாராமல் ஷை சட்ட விரோதமான தீர்மானங்களை டிஸ்திரிக்டு முனிசிப்பு கோர்ட்டார் அவர்கள் ரத்து செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்ளப் படுகிறது. மேலும் ஷை கிராமக் கோர்ட்டார் இவ்விதமான காரியங்களில் இனி தலையிடாமலிருக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

B. குப்புசாமி செட்டி, பவானி.

## ஸ்ரீமான் ஏ. எஸ். பரசுராம நாயக்கர் அபேக்ஷகராக நிற்கிறார்.

தனது நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க சென்னை சட்டசபை தேர்தலுக்கு வட ஆற்காடு ஜில்லாவின் முகமதியரல்லாத தொகுதிக்கு ஆரணி பிரபல வியாபாரியான ஸ்ரீமான் ஏ. எஸ். பரசுராம நாயக்கர் தாம் ஒரு அபேக்ஷகராக நிற்பதாய் அறிவிக்கிறார்.

கோயமுத்தூர் ஜில்லா போர்டு தலைவர்
ஸ்ரீமான் ராவ் பஹதூர்
சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார்
அவர்களுக்கு
பெருந்துறை பிற்கா மஹாஜனங்கள்
வாசித்துக்கொடுத்த

## உபசாரப் பத்திரம்.

அன்பின்மிக்கீர்!

தங்கள் வரவு நல்வரவாகுக. கோவை ஜில்லாவில் ஜில்லா போர்டின் தலைவர் ஸ்தானத்தில் இரண்டாந்தடவை அமர்ந்து உபசரிக்கும் பாக்கியத்தையடைந்த பெருந்துறைப் பிற்காவாசிகளின் பாக்கியமே பாக்கியம்.

தாங்கள் பழமையான குடும்பத்திற் பிறந்து அன்பு, அறிவு, தேற்றம், அவாவின்மை ஆகிய இந்த நான்கு குணங்களும் தங்களிடம் செறிந்து விளங்கிய காரணமாக கோவை நகர் வாசிகள் தங்களை கோவை நகர பரிபாலன சபைத் தலைவராக அடையப் பெற்றனர். தாங்கள் தேசத்தொண்டும், பொதுஜன நன்மையையும் கருதிய காரணத்தினால் கோயமுத்தூர் ஜில்லா வாசிகள் தங்களை ஜில்லா போர்டு தலைவராகவும் அடையப்பெற்றனர்.

தாங்கள் மேற்கண்ட பொது ஸ்தாபனங்களில் நிர்வாகங்களை வகித்திருந்த காலங்களில் கோயமுத்தூர் ஜில்லா வாசிகளின் நன்மையை நாடித் தாங்கள் புரிந்த அரும்பெரும் சேவைகள் பலவுள. அவைகளில் பெரும் ஜனத்தொகைகொண்ட கோவை நகர் வாசிகளின் ஜலக் கஷ்டத்தைப் போக்க சிறு வாணிநதியிலிருந்து நகரத்துக்குக் குழாய் மூலமாக ஜலம் கொண்டுவரும் திட்டமும், பவானி நதியில் பாலங்கட்டும் திட்டமும் பல ஆண்டுகளாக கட்டைவண்டிகளும் நடமாட மார்க்கமில்லாத பல இட்டேரிகளை நல்ல இராஜபாட்டைகளாக சீர்திருத்தியதும், ஜெயில் நிர்வாகக் கமிட்டியில் அங்கத்தினராக இருந்து தங்களுடைய இராஜ்யக் கொள்கைக்கு முழுதும் மாறுபட்ட இராஜ்யக் கைதிகளை அதிகாரிகள் நடத்திய வெறுக்கத்தகுந்த முறையைக் கண்டு அன்பு சொரூபமாகிய தாங்கள் சகியாது அக்கமிட்டியில வகித்துவந்த ஸ்தானத்தை இராஜிநாமாக்கொடுத்த தங்களுடைய சுயநலமற்ற சமரச நோக்கங்கொண்ட தியாகத் தன்மையும், ஐக்கிய நாணய இயக்கத்தில் ஈடுபட்டு விவசாயிகளுக்கு வேண்டிய நன்மை புரிந்ததும், தென்னிந்தியா ரயில்வே போர்டின் ஆலோசனை கூறும் கமிட்டியில் அங்கத்தினராயிருந்து பாமர ஜனங்களுக்கு அனுகூலமான யோசனைகளை கம்பெனியாருக்கு எடுத்துக் கூறி நன்மை புரிந்ததும் கோவை வாசிகளின் கவனத்தில் இன்னும் பிலலிக்கொண்டிருக்கின்றன.

இவ்வளவு தங்கள் பொது நல ஊழியத்தைப்பற்றிப் பேசிய நாங்கள் இது சமயம் எங்கள் குறைகளையும் சிறிது தங்கள்பால் விண்ணப்பித்துக்கொள்வது எங்கள் கடமையாகும். பெருந்துறை போர்டு மிடில் ஸ்கூல் இப்போதிருக்கும் கட்டிடம் முன் போர்டு எலிமெண்டரி பாடசாலையாகவிருந்தது. தற்சமயம் எலிமெண்டரி பாடசாலை ஊருக்கு வெகு தூரத்திலிருக்கிறபடியால் சிறுவர்கள் ஸ்கூலுக்கு தனியாகப் போகமுடியாமலும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை தைரியமாக அனுப்பமுடியாத நிலைமியிலும் இருந்து வருவதால் ஷை எலிமெண்டரி பாடசாலை ஒன்று மிடில் ஸ்கூலுக்கு அருகாமையில் கட்டிக் கொடுக்க தாங்கள் தங்களாலியன்ற உதவி செய்ய வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம், எங்கள் ஜில்லா செய்த புண்ணிய மேலீட்டால் தங்களை இரண்டாந் தடவையும் ஜில்லா போர்டு தலைவராக அடையப் பெற்றோம். தாங்கள் இப் புதிய கௌரவ உத்தியோகத்தை ஏற்று நலம்பெற நடத்துவதற்கு வேண்டிய ஊக்கமும், திடகாத்திரமும், தீர்க்காயுசும், அருள் புரியுமாறு எல்லாம் வல்ல சர்வேஸ்வரனைப் பிரார்த்திக்கின்றோம்.

இப்படிக்கு,
பெருந்துறை பிர்க்கா, மகாஜனங்கள்.


## ஜீர்ணமிர்தம்.

தங்கம் சேர்ந்த ருஜிகர ராஜ ஔஷதம்.

அஜீர்ணத்தையும், மலச்சிக்கலையும் நன்கு கண்டித்து நல்ல பசியையும் ஜீர்ண சக்தியையும் தரும். தேகம் வலுப்படும். பித்தம், இருமல், வயிற்றுப் பிசம், குக்தல், மூலம், பீனிசம், மார்பெரிச்சல் காசம், புளிப்பேப்பம், ஆகாரங்கள் முதலியவற்றை உடனே குணப்படுத்தி விடும். ரத்த விருத்தியையும் தேக புஷ்டியையும் தரும். டின் 1-க்கு ரூ. 1. டின் 2-வரை வி. பி. அணா 5.

பிரஜானுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்

ஸ்ரீவில்லிபுத்தூர்
பி. பி. அன்ஸன்
பிஸ்கட் பக்டரி.
குழந்தைகளுக்குத்தந்த ஆகாரம்
அராரூட் பிஸ்கட்.
சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது
ரூஸ்டரி பிஸ்கட்.
புஷ்டியைக் கொடுக்கக்கூடியது
பழம் கேக்.
எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்.
P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.


காலஞ்சென்றார்.

கோயமுத்தூரில் ஆள்வார் சபை, ஆலயம், நந்தவனம், முதலிய சிறந்த தர்ம கைங்கர்யம் செய்துவைத்த வைணவ பக்தர் ஸ்ரீமான் பக்தவக்சலு நாயுடுகாரு அவர்களின் தர்மபத்தினி ஜானகி அம்மாள் என் ... அம்மை ஆவணி 6-ந் தேதி ... திருவடியடைந்தார். கருமகைங்கர்யங்கள் 6—9—26-ல் கோயமுத்தூரில் நடைபெறும்.

பி. வி. ... ராஜுலு நாயுடு.


AWARDED
GOLD MEDALS & CERTIFICATES OF MERIT




FLOWS FREELY AND NEVER FADES
This is the ink, to keep your records fresh after years.
ALAYAM'S INK FACTORY
COIMBATORE, S. INDIA.

## தலைவர் பதவி பெறும் வழி.

நம் நாட்டில் தேர்தல்களில் பதவிகள் பெறுதல், பட்டம் பெறுதல், சர்க்கார் உத்தியோகம் பெறுதல் முதலிய பல காரியங்கள் பெரும்பாலும் முக்காலே மூணுவீசமும் கண்ணியக் குறைவாலும் பொய்ப் பிரசாரத்தாலும் இழி தொழிலாலுமே கிடைக்கப்பட்டு வருகிறது. என்பதை சத்திய நெஞ்சுடைய எவரும் மறுக்கமாட்டார்கள். ஆனால் காங்கிரஸ் பிரசிடெண்டு என்கிற ஸ்தானம் கொஞ்சகாலமாய் அப்படிக்கில்லாமல் தனிப்பட்ட மக்களின் சுதந்திரத்திற்கு விடப்பட்டு வந்தது. உதாரணமாக இதற்கு ஆள்களை விட்டு பிரசாரம் பண்ணியும் பணம் செலவு செய்தும், பொய் வாக்குத்தத்தம் செய்தும், இதுவரை யாரும் அந்த ஸ்தானத்தை அடைந்ததில்லை. நமது பார்ப்பன ஆதிக்கத்திற்கு காங்கிரஸ் வந்ததின் பலனாய் இப்போது இதற்கும் மற்ற தேர்தல்களைப்போலவே யோக்கியதைகள் ஏற்பட்டுப்போய்விட்டது.

ஏனெனில் மற்ற தேர்தல்களையும் பட்டங்களையும் உத்தியோகங்களையும் பெற நமது பார்ப்பனர்கள் என்னென்ன முறைகள் கையாண்டு அதன் யோக்கியதையைக் கெடுத்து வாழ்கிறார்களோ, அதுபோலவே இதிலும் பிரவேசித்து விட்டார்கள். ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்காருக்கு காங்கிரஸ் பிரசிடெண்டு வேலை கிடைப்பதற்கு ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு சென்னை பார்ப்பனர் போய் பிரசாரம் செய்யவும் ஆங்காங்குள்ள காங்கிரஸ் கமிட்டிகளில் பிரதானமாயுள்ளவர்களில் யாராவது பணங்காசு வாங்கக்கூடியவர்களாயிருந்தால் அவர்களையும் திருப்தி செய்தும், பதவி ஆசையுள்ளவர்களாயிருந்தால் அவைகளையும் பற்றி பொய் வாக்குத்தத்தம் செய்தும் ஓட்டுகள் பெற பிரசாரம் செய்ததால் உண்மையிலேயே அதிக ஓட்டுப்பெற்றவரும் இன்னும் பெற இருந்தவருமான டாக்டர் அன்சாரி அவர்கள் இவற்றை அறிந்தே இந்த பிரசிடெண்டு உத்தியோகம் என் போன்றவர்களுக்கு லாயக்கில்லை, இதெல்லாம் பெரிய மனிதர்கள் என்கிறவர்களுக்கு வேண்டிய பதவி, என்று. பரிகாசமாய்ச் சொல்லி விலகிக்கொண்டார்.

அடுத்தபடி அதிக ஓட்டுக் கிடைக்கப்பெற இருந்த ஜனாப் மஜூருல்ஹக் என்னும் பெரியாரும் இவ்வித இழிவுப் பிரசாரத்தில் இரங்க மனமில்லாதவராகி இம்மாதிரி போட்டி போடுவதானால் எனக்கு வேண்டாம், கண்ணியமாய் வருவதானால் வரட்டும், என்றே சொல்லி போட்டியில் இருந்து அறவே விலகி விட்டார். எவ்வளவு உயர்ந்த தத்துவங்களைக் கொண்டதானாலும் எவ்வளவு பரிசுத்தமானதானாலும் நமது பார்ப்பனர் அதில் கலந்தால் அதின் யோக்கியதை பார்ப்பனீயத்திற்கு தகுந்தபடி ஆகிவிடுகிறது என்பதை பொதுஜனங்கள் அறிவதற்காகவே இதைக் குறிப்பிடுகிறோம்.

---

## சர்வஜன வித்தியாசாலை.
### (ஹைஸ்கூல்)

மேற்படி வித்தியாலயத்தின் மானேஜ்மெண்டார் மகா ஜனங்கள் சமுகம் சமர்ப்பிக்கும் விண்ணப்பம்,

ஸ்ரீ வித்தியாலயத்தின் கட்டடம், சைன்ஸ் சாமான்கள், புத்தகசாலை, பெஞ்சு, நாற்காலி, மேஜை முதலியனவும், ஏழை மாணவர்களுக்கு இலவசச் சம்பளமும் வருஷந்தோறும் நடந்து வரும் நிர்வாக செலவுகள் முதலிய இனங்களிலும் 1922-ஆம் முதல் 1926-ஆம் முடிய ரூ. 75,000 எழுபத்தையாயிரம் ரூபாய் பிடித்திருக்கின்றது.

இது நீங்கலாக மேற்கொண்டு இன்னம் சைன்ஸ் கட்டடம், (Play-ground) விளையாடும் இடம், புத்தகாலய அபிவிருத்தி சைன்ஸ் அபிவிருத்தி முதலிய துறைகளில் பல வேலைகள் செய்யவேண்டியிருப்பதாலும், வருடந்தோறும் நடத்திவரும் நிர்வாகச் செலவினத்தைப் பூர்த்தி செய்யவேண்டியிருப்பதாலும் மகாஜனங்களிடமிருந்து ரூ. 1,00,000 ஒரு லக்ஷம் ரூபாய் நன்கொடையாக எதிர்பார்க்கப்படுகின்றது; என்ற விஷயத்தை வணக்கமாய்த் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

P. S. G. ரங்கசாமி நாயுடு. மானேஜர்.

மேற்படி வேண்டுகோளுக் கிணங்கி மனமுவந்து நன்கொடையாகக் கொடுப்பதாய் கையொப்பமிட்ட கனவான்களும் பணம் அளித்த கனவான்களும்:—

ஸ்ரீமான் C. V. வெங்கிட்ரமணய்யங்கார் அவர்கள் கோயமுத்தூர் நன்கொடை தொகை ரூ. 2001—0—0, இத் தொகையில் 1001-க்கு செக் கொடுக்கப்பெற்றது. ஸ்ரீமான் அ. ம. நஞ்சப்ப செட்டியார் அவர்கள் வியாபாரம் ரூ. 251—0—0, ஸ்ரீமான் கொள்ளுப்புறம் நா. வேலாசாமி செட்டியார் அவர்கள் ஜவுளி வர்த்தகம் 125—0—0 ஸ்ரீமான் S. ராமச்சந்திரஞ் செட்டியார் & சன்ஸ் அவர்கள் 251—0—0, ஸ்ரீமான் C. S. ரத்தினசபாபதி முதலியார் அவர்கள் முனிசிபல் சேர்மன் டிஸ்டிரிக்ட் போர்டு பிரசிடெண்டு 101—0—0, ஸ்ரீமான் P. ரத்தினசபாபதி கவுண்டர் அவர்கள் 501-0-0. ஸ்ரீமான் S. பீமைய செட்டியார் அவர்கள் 501—0—0, ஸ்ரீமான் V. கிருஷ்ணசாமி பிள்ளை அவர்கள், ஓலவக்கோடு 101—0—0 ஸ்ரீமான் Y. P. R. L. M. யேகப்ப செட்டியார் அவர்கள் 501—0—0, ஸ்ரீமான் வெரிவாட செட்டியார் அவர்கள் 251—0—0, ஸ்ரீமான் A. T. லட்சுமணசாமி முதலியார் அவர்கள் 101—0—0, ஸ்ரீமான் G. ராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் 101—0—0, ஸ்ரீமான் பிள்ளார் செட்டியார் அவர்கள் 151—0—0, ஸ்ரீமான் C. V. V. சுப்பைய செட்டியார் அவர்கள் 201-0-0. ஸ்ரீமான் M, R, ஆரோக்கியசாமி பிள்ளை அவர்கள் 101—0—0, ஸ்ரீமான் V, கந்தசாமி பிள்ளை அவர்கள் 101.

மேற்கண்ட கனவான்கள் 23-உ முதல் நாளதுவரையில் மனமுவந்து நன்கொடை அளிப்பதாக கையொப்பமிட்ட கனவான்களுக்கும், பணம் அளித்த கனவான்களுக்கும் எமது மனப்பூர்வமான வந்தனத்தை செலுத்துகிறோம். மேலும் தொடர்ச்சியாக இந்த தனத்திற்காக வசூல் செய்து கொண்டிருக்கிறோம்.

தவிர இதே மாதிரி இன்னும் மற்றுமுள்ள பெரியோர்கள் அனைவரும் எம்மிட்டும் அன்பு பூண்டு நாங்கள் எடுத்துக்கொண்ட இந்த வித்யாலய கைங்கர்யத்திற்கு மேலும், மேலும் வேண்டிய உதவிகள் புரிந்து வருவார்களென்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இங்ஙனம்,
வித்தியாலயத்தின் மானேஜ்மெண்டார்.

---

## ஜேஷ்டபுத்திரனும் தேசபக்தனும்

—(o)—

சென்ற ஜூலை மீ 25, 26, நாட்களில் இக்கொழும்பில் நடந்தேறிய இந்திய வாலிபர் சங்க ஆண்டுவிழாவிற்கு தலைமை வகிக்க திருவுளங்கொண்டு இன்னுடைடைந்து அறிய உயறிய சொற்பொழிவுகள் சில நிகழ்த்தி தாய்நாடு போந்த உண்மை தேசபக்தரும் நம் தமிழணங்கின் திருக்குமாருமாகிய உயர்திரு. கலியாணசுந்திரமுதலியாரவர்கள் இவ்வாறயடைந்து சொற்பொழிவுகள் நிகழ்த்தி பிரவூர்சென்றதைப்பற்றி இக்கொழும்பு மாநகரில் கௌரவ நடேசையரவர்களால் பிராமணரல்லாதாரின் உதவியாலும் முயர்ச்சியாலும், நடத்தப்படுகிற தேசபக்தனென்னும் தமிழ்ப்பத்திரிகையை தற்பொழுது பி.பி. அய்யங்கார் என்பவரால் நடத்தப்படுகிறதாம் இப்பக்தனுக்கும் முதலியாருக்கும் என்ன வருத்தம்? இப்பத்திரிகைக்கு எவ்விதத்திலாவது எதாவது உதவியோ சந்தா, அல்லது விளம்பரம் சேர்த்துக்கொடுத்தோர்களும், காங்கிரஸ் காரர்களும் போலி தேசாபிமானிகளும் "பொதுக்காரியங்களுக்கென்று பணம் திரட்டவருவோரும், பணக்காரர், செட்டிகள், பிராமணர்கள் முதலியவர்களில் எவராவது இந்நாட்டிற்கு வருவதாயிருந்தால் உடனேபோற்றிப்புகழ்ந்து 'நல்வரவாகுக' என்றும் தாய் நாடு செல்வதாகயிருந்தால் சென்று வருகவென்றும் பத்தி பத்தியாக அவர்களை சிறப்பித்து எழுதுகிற இப்பக்தனுக்கு இப்பெரிய தமிழ்நாட்டு தவப்புதல்வர் வருவது தெரியாமலாபோய் விட்டது? டிப்டி. காந்தியும் மகாத்மாவிற்கு மூளையில்லை என்றவரும் வந்திருப்பார்களானால் என்ன நடக்கும்? இப்பக்தனும் தற்பொழுது கும்பகர்ணன் வேலையை ஒப்புக்கொண்டுள்ள காந்தி சங்கமும் இந்நகரில் இருந்தென்ன பலன்? இச்சங்கமும் பத்திரிகையும் ஒன்றுபட்டு தென் இந்தியமக்களின் தலைவர்களில் ஒருவருமான ஸ்ரீ முதலியாரை வரவேற்று உபசரித்து முக்கியமான இடங்களில் இன்னும் சில கூட்டங்களைக்கூட்டுவித்து சம்ரம்மாக வழியனுப்பிவைத்தால் இன்னும் எவ்வளவு சிறப்பாக இருக்கும் ஏதோ கடனுக்கெழுதுவதுபோல் பக்தன்மட்டும் முதலியார் கண்டிக்குப் போகிறதைப்பற்றி ஓர் மூலையில் குறித்திருந்தது அதுவும் பக்தனை ஆதரிப்போரின் கோபத்திற்காளாகும்படி நேருமோவென்றும் தமது பிரதிநிதியை

## பெரம்பலூர் தாலூகா முதலாவது பார்க்கவகுல மகா நாடு.

———(o)———

இரண்டு நாட்களிலும் ஏராளமான கூட்டம் கூடியது. ஆண்கள் 1000மும் பெண்கள் 200ம் குழுமியிருந்தனர். கூட்டத்திற்கு பல ஜில்லாக்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர். இதற்கு முன் நடைபெற்ற மாகாண மகாநாடுகளைப்போல் இதுவும் நடந்தேறியது குறிப்பிடத்தக்கது. முறைப்படி அக்கிராசனரைத் தேர்ந்தெடுத்ததும் அக்கிராசனருக்கு ஓர் வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பெற்றது. பின்னர் தலைவர் சேலம் ஜில்லா, மாரண்டஹள்ளி மிட்டாதார் பார்க்கவபந்து மா. ர. வேங்கடாசல உடையார் ஓர் அரிய முகவுரைப்பிரசங்கம் செய்தார். அதன்கண் கல்வியைக் குறித்தும், ஆக்க வேலையைக் குறித்தும் வற்புறுத்தியிருந்தார். கூட்டத்திற்கு வந்திருந்தவர்களுள் திருவாளர்களான திருக்கோவலூர் ம.ரா.குமாரசாமி உடையார், அரசர்மடம், சாமிசிதம்பரஉடையார், செட்டியார்பேட்டை சுந்தரஉடையார் வில்வராயநல்லூர் முத்துக்குமாரஉடையார் மேலக்கற்கண்டார் கோட்டை, "தெய்வீகன்" ஆசிரியர் மே. வே. துரைசாமிஉடையார் திருச்சி ச.ம.சி.பரமசிவம்செட்டியார், துறையூர் சுப்பராயஉடையார், ஆலம்பாடி மருத உடையார், வேப்பந்தட்டை வ.மு. ஆறுமுகத்துடையார், செல்லப்பிள்ளை உடையார் ஒ. ம. சுப்புடையார், க. சி. சுப்பராயஉடையார். கி. மு. வெங்கடாசலஉடையார், கி. மு. செல்லமுத்து உடையார் முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். முதல்நாளும் இரண்டாம்நாளுமாக "நம் நிலையும், வரலாறும்" "சமூகமுன்னேற்றம்" "வருங்காலவேலை" முதலியபொருள் குறித்து திருவாளர்களான ம.ரா.குமாரசாமிஉடையார், சாமிசிதம்பரனுர். மே. வே. துரைசாமிஉடையார் ஆகியவர்கள் பேசினர். அப்போது கூட்டத்தில் பின் கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

1(a) மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தியவர்களுக்கு இக்கூட்டத்தார் தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன், சக்கரவர்த்தியவர்களுக்கு எல்லா நன்மையும் உண்டாகுமாறு இறைவனை வணங்குகின்றனர். (b) நமது தேசப்பிரதிநிதியாகவிருந்து காந்தியடிகள் ஆற்றிவரும் தொண்டு குறித்து இக்கழகத்தார் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவர்களது புனிதகொள்கைகளுக்கு போதரவளிப்பதாகவும் முடிவு செய்திருக்கின்றனர்.

2. பெரம்பலூர் தாலூகா சங்கக்காரியங்களைச்செய்வான்வேண்டி கீழ்க்கண்ட அங்கத்தினர்களைக்கொண்ட பஞ்சாயத்தை இம்மகாநாடு தெரிந்தெடுக்கிறது. திருவாளர்களான வேப்பந்தட்டை செல்லப்பிள்ளையுடையார், வ.மு.ஆறுமுகத்துடையார், பாலையூர் க. சி. நல்லபெருமாள்உடையார், தொண்டபாடி கி.மு.செல்லமுத்துடையார், நெக்குப்பை பெரிய வீடு ராமசாமி உடையார், ஆலம்பாடி அ. மருதஉடையார், தளுதாளை பெரியசாமிஉடையார், கிழப்புலியூர் நல்லபெருமாள்உடையார், மாவலிங்கை வ. மு. செல்லமுத்துடையார், சிறுகுடல் அப்பாவு உடையார், அருனுரை தி. வெங்கடாசல உடையார், சிருகாம்பூர் சிவக்கொழுந்து உடையார். புஜங்கராயநல்லூர் டி. கே. சாமிநாதஉடையார், ஐயனுபுரம் கருப்புடையார், செங்கணம் நல்லுடையார், கோபாலபுரம் முத்துடையார், பேரளி கந்தசாமி உடையார், வ[illegible] கணபதிமுப்பனுர், இலந்தங்குளி முத்தசாமி உடையார், இதற்காணப் பெருந்திருமங்களில்உறுப்பினர்களைச்சேர்க்கும் பொறுப்பு இக்கமிட்டிக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

3. இந்த தாலூகாவிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கிராம பார்க்கவகுலச்சங்கம் திறவவும் ஆரம்பபாடசாலை ஏற்படுத்தவும் வாசகசாலை ஸ்தாபிக்கவும் பொதுவாகத்தாலூகாசங்கத்தாரும், சிறப்பாக கிராமவாசிகளும் பெருமுயற்சி யெடுத்துக்கொள்ள வேண்டுமென்று இச்சபை தீர்மானிக்கிறது.

4. நம்மவர்களுள் நடைபெறும் கலியாணம், சிரார்த்தம் முதலிய சடங்குகளை அந்நியர்களைக்கொண்டு நடத்தாமல் சைவக்குருமார்களைக்கொண்டு நடத்துமாறு இக்கூட்டம் வற்புறுத்துகிறது.

5. கதர்கட்டுவதின் மூலமும், சிலர் கைக்கொண்டிருக்கும் தீமைகளை விலக்குவதன் மூலமும், நமது பொருளாதார நிலையை வளர்ச் செய்ய முயற்சிக்க இக்கூட்டம் வற்புறுத்துகிறது.

6. நமது பனகால்அரசர் அவர்களால் 1924ல் நிறைவேற்றப்பட்டிருக்கும் இந்துமதபரிபாலனச்சட்டத்தையும், அதற்கு உதவியாக இப்பொழுது கொண்டுவந்திருக்கும் திருத்த மசோதாவையும் இக்கூட்டம் மனப்பூர்வமாக ஆதரிக்கிறது.

7 (a) பின்னடைந்த சமூகங்களெல்லாம் முன்னேறுவதற்கு மிகஉதவியாயுள்ளதாகவிருக்கும் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தை இக்கூட்டம் ஆதரிக்கிறது. (b) தாலூகா போர்டு, ஜில்லாபோர்டு போன்ற ஸ்தாபனங்கட்கு நம்மவர்கள் வெற்றிபெறும் வண்ணம் உதவிபுரியுமாறு நம் மக்களனைவரையும் இக்கூட்டம் வேண்டிக்கொள்ளுகிறது.

8 "[illegible]வீகன்" லிமிடெட் கம்பெனி ஆஸ்ரமம், மாணவர்கழகம் முதலியவற்றிற்கு இத்தாலூக்காவில் போதரவளிக்கத் தீர்மானிக்கிறது.

குறிப்பு:—பங்கு ஒன்றுக்கு ரூ100 ஏற்படுத்தவேண்டுமென்றும் கம்பெனி திருச்சியிலிருக்கவேண்டுமென்றும் ஆசிரியர்களாக திருவாளர்களான மே. வே. துரைசாமி, சாமி சிதம்பரனுர், ஆகியவர்களையே ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்றும் முடிவு செய்யப்பெற்றது. ஆவணி 25தேதிக்கு மேல் இதுகுறித்து முடிவான அறிக்கை வெளியிடப்பெறும்.

9. உயர்ந்த சமூகம் என்று கருதப்படுபவர்களால் இகழ்ச்சி செய்யப்பெறும் கெட்ட ஒழுக்கங்களையெல்லாம் அறவேவிட்டொழிக்குமாறும், பெரியோர்களால் விரும்பப்பெறும் நல்லொழுக்கங்களைக் கைக்கொள்ளுமாறும் நமது குலத்தினரை இக் கூட்டம் வேண்டிக்கொள்ளுகிறது.


தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற

ராஜவைத்ய ஆஸ்ரமம்,

சரஸ்வதி விலாசம் பிரஸுக்கு எதிரில் செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜபிளவை, கட்டிகள்,
நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆபரேஷன் இல்லாமல்
சௌக்கியம் செய்யப்படும், விபரத்திற்கு எழுதுங்கள்.

ஆயிரக்கணக்கான

மூல பவுத்ர வியாதி யஸ்தர்கள்

சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.


பேட்டிகண்டு பேசியதற்காகவுமே எழுதியிருக்கவேண்டும். இவ்வளவுதூரம் பக்தனுக்கு திரு. முதலியாரின் பேரில் வெறுப்புண்டாக காரணமென்ன? அன்னாரும் பிராமணர்களின் சூழ்ச்சியைக் கண்டித்து பிராமணரல்லாதாரின் சுயமரியாதையை ஆதரிப்பதாக இருப்பதால் தான் இப்பக்தன் அப்பெரியாரைப்பற்றி வாவேற்றுபசரித்து வழியனுப்பி உபசாரம் கூறாததால் அவருக்கு ஒன்றும் குறைவில்லை. அதனால் பக்தரின் துவேஷ புத்தி வெளியாவதோடு பழிச்சொல்தான் கிடைத்திருக்கிறது. இனியாவது இம்மாதிரி பொதுமக்களிடை வகுப்பு வேற்றுமையில்லாமலும் ஆத்திரத்திற்காளாகாமலும்உயரிய நோக்கங்கொண்டு உண்மையுடன் உழைத்து உலாவிவருவானாக.

(உண்மையுரைப்போன்.)

குறிப்பு:—இப்பார்ப்பனர்கள் நமது சுயமரியாதைக்கு முழு எதிரிகள் என்று தெரிந்திருந்தும் இவர்களை அழைத்துக்கொண்டு நமது ஸ்ரீமான் முதலியாரும் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரும் ஊர் ஊராய்த்திரிந்து இப்பார்ப்பனர்களுக்குக்கிடைக்கும் கல்லடியையும் சாணி அடியையும் மித்துவைத்ததோடு இவர்களை நாக்குக்கூசாமல் தலைவர்கள் என்று சொல்லி பாமர ஜனங்களுக்கு அறிமுகம் செய்வித்து ஒரு மணிநேரம் இரண்டுமணிநேரம் தொண்டைகிழியச் செய்த பிரசங்கங்களையே ஒரு அங்குலம் ஒண்ணரை அங்குலம் அளவும் பொய்யும் புரளுமாய் பிரசுரித்துவிட்டு அந்த பேசவதற்கே இடம் கிடைக்காத ஸ்ரீமான் சத்தியமூர்த்தி போன்றவர்களை பெருந்த காலோஸத்தினிடையேபேசினர் என்று மூன்றுகலம் நான்கு கலம் எழுதுகிறவர்கள் இந்த நாட்டு விஷயமும் இப்பார்ப்பனர்கள் அக்கிரமமும் தெரியாத கொழும்பு தேசத்தில் பேசியதற்கு ஒரு பார்ப்பனப் பத்திரிகை போடவில்லை என்று சொல்வது தேளால் கடிபட்டவன் இதென்ன வலிக்கிறதே என்று சொல்வது போல் இருக்கிறது. கொழும்புத் தமிழ் மக்கள் இவ்விதப்பார்ப்பனர் பத்திரிக்கைகளை ஆதரிப்பது நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது

ப---ர்

சற்குருவே துணை.

# ஸ்ரீ நமசிவாயகுரு தமிழ்சித்த ஆயுள் வேத வைத்தியசாலை, கோயமுத்தூர்.

இக் கோயமுத்தூரிலும் சென்னை முதலான விடங்களிலும் தீராதெனக் கைவிடப் பட்ட கொடிய வியாதிகளை வெகுசீக்கிரத்தில் சவுக்கியம் செய்து அநேக நற்சாக்ஷிப் பத்திரங்களும் பரிசுகளும் மெடல் சங்கிலி முதலியவை பெற்றவரும் ஸ்ரீ நமசிவாய குரு தமிழ் சித்த ஆயுள் வேத வைத்திய சாலை அதிபருமாகிய கோ. ந. முருகைய பண்டிதர் அவாகளால் தயார் செய்யப்பட்டு உலக பிரசித்தி அடைந்து வரும் ஔஷதங்கள்.

## மேக ராஜாங்க மதன விந்தாதி லேகியம்



மேலேகண்ட மேகராஜாங்க மதன விந்தாதி லேகியத்தை காலை மாலை இரு வேளையாக ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவதினால், 20 வகை மேகத்தை போக்கி திரேகத்தை பசும் பொன் போல் செய்வது மன்றி, சிலேற்பனம் 96ம் கிரந்தி, அரையாப்பு, சூலை, க்ஷயம், ஈளை இருமல், மந்தாரகாசம், காமாலை, சோகை, பாண்டு, குன்மம் 8-ம் கிரிச்சனங்கள் 6-ம் வாய்வு 26ம் பித்தம் 40-ம் இலிங்க புற்று, ஸ்திரிகளுக்கு யோனி புற்று, வெள்ளை, மஞ்சள் வெள்ளை, பிர மேகம் சொறி கறப்பான், மேக ஊறல், தண்டில் புண், கண்ட மாலை, மகோதிரம், நீராமை, கவுசி, உள மாந்தை, அஸ்திஜுரம் அஸ்திவெட்டை, உஷ்ண வாய்வு அரோசகம், அன்னத்துவேசம் வாந்தி, விக்கல், கால்கை எரிவு, பெரும்பாடு, எலும்பு புருக்கி நோய், மூல வாயுவு, மூலத்தில் ரத்தம், கிரு கிருப்பு மயக்கம், நித்திரை, ஸ்திரிகளுக்கு கெற்ப நோய் 7ம் ஸ்திரிகள் மலடியாயிருந்தால் கெற்பம், நீரடைப்பு, சதையடைப்பு, துர்மாங்கிச அடைப்பு, சீதக்கடுப்பு, முதலான கொடிய ரோகங்களை சுகப்படுத்தி தேகம் சிவந்து மின்னும் இந்திரியம் இருகி கட்டும் இதை வயோதியர்கள் சாப்பிட்டு வருவார்களானால் ஜீவாதார நரம்புகள் முறுக்கேறி தாது விர்த்தியையும் ஆண்மையையும் உற்சாகத்தையும் தேகாரோக்கியத்தையும் ஆனந்த சுகத்தையும் கொடுப்பதில் இதற்கு நிகரான லேகியம் வேறேயில்லை யென்று உறுதியாய் கூறுகிறேன். ஆண் பெண் யாவர்களும் சாப்பிடலாம் ஒரு தரம் வாங்கி அநுபவிப்பீர்களானால் இதன் உண்மை நன்கு விளங்கும். பத்தியமில்லை.

48-நாள் சாப்பிடக்கூடிய லேகியம் சேர் 1-க்கு விலை 5-0-0
24-நாள் ,, சேர் ½-க்கு விலை 2-8-0
12-நாள் ,, சேர் ¼-க்கு விலை 1-4-0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

## குணத்திற் சிறந்தது! விலை குறைந்தது!! பரிமளமிகுந்தது!!!

## சர்வ மேகங்களுக்கும் மகா ராஜாங்க சுகந்த பரிமளாதி ஸ்நானத்தைலம்.

மேலே கண்ட சுகந்த பரிமளாதி ஸ்நானத் தைலத்தை ஆண் பெண் யாவரும் ஸ்நானம் செய்து வருவதாலும் நித்தியம் தலையில் தடவி தலைவாரி வருவதினாலும் தீரும் வியாதிகள், மேகம், நீரெரிவு, நீர் எரிச்சல், கிரிச்சனம், க்ஷயரோகம், கண்ணெரிவு, கண் புகைச்சல், கைகாலெரிவு, பிரமேகம், ரணம், கிரந்தி கற்றாளை நாற்றம், அஸ்திஜுரம், அஸ்தி வெட்டை, உள் வெட்டை, தாது நஷ்டம் பித்தத்தாலுண்டாகும் மயக்கம் புண் புரை முதலானவைகளும் குழந்தைகள் முதல் ஆண் பெண் யாவர்களும் தலைக்கு பத மிட்டு வாரி வந்தால், தலையில் மேகத்தினாலுண்டாகும் பொடு அதினால் சகிக்க முடியாத அரிப்புண்டாகி கோதுமை தவிடுபோல் உதிருகின்றதும் மாறிப்போகும். இந்த தைலமானது எங்கள் முன்னோர்களால் கையாண்டு வந்ததும் என் அநுபவத்துக்கு வந்து ஆயிரக்கணக்கான ரோகிகளுக்கு சகல வியாதிகளையும் சவுக்கியப்படுத்தி இருக்கிறேன். மேற்படி சுகந்த பரிமளாதி ஸ்நான தைலமானது யாதொரு நோய் வராமல் பாது காப்பதோடு ராஜ கருவியாகிய மூளைக்கு குளிர்ச்சியையும் கண்களுக்கு பூரண சந்திரன் போன்ற குளிர்ந்த பிரகாசத்தையும் திவ்விய தேஜஸ்ஸையும் ஞாபக சக்தியையும் உற்சாகத்தையும் தேகாரோக்கியத்தையும் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை. பத்தியமில்லை.

☞ 24-அவுன்ஸ் கோண்ட சீசா 1-க்கு விலை 5—0—0 ☞ 12-அவுன்ஸ் கோண்ட சீசா 1-க்கு விலை 2—8—0
☞ 6-அவுன்ஸ் கோண்ட சீசா 1-க்கு விலை 1—4—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

## வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகை,

மேலேகண்ட கஸ்தூரி வாய்வு குளிகையானது தங்கம், வெள்ளி, முத்து, பவளம் தாம்பிரம் முதலாகியவைகளாலும் உயர்ந்த சரக்குகளாலும் பெரும்பாலும் சாஸ்திர ரீதியாய் மிக்க பிரையாசையுடன் யாவரும் எளிதிலடையும்படி சித்தம் செய்யப்பட்ட இந்த கஸ்தூரி வாய்வு குளிகையை உபயோகித்து வருவதினால் உஷ்ணத்தினாலுண்டாகும் வாய்வு, மாரடைப்பு, இடுப்புவலி, வயற்றுப்பிசம், நீர்கட்டு, பெண்களுக்கு கெற்பபையிலுமுள்ள ரணம், அதனால் சீவுண்டாகி வயற்றில் குத்தல். வெள்ளை விழுதல், சகிக்க முடியாத வயற்றுவலி, இவ்வித வியாதிகளுக்கு இங்கிலீஷ் வைத்தியர்கள் வயிற்றை ஆப்பிரேஷன் செய்து பார்க்காமல் நிவர்த்தி செய்ய முடியாதென்று முடிவு சொன்ன வியாதிகளை அநேகர்களுக்கு எங்களுடைய வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகையினால் நாலு ஐந்து வேளையில் பூரண சொஸ்தப்படுத்தி அதனால் பரிசுகளும் மெடல்களும் சங்கிலி முதலானதும் பெற்றிருக்கிறேன்.

மேல்கண்ட வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகை அற்புத குண முடையன என்பதிற் சற்றும் சந்தேகமில்லை.

☞ 12-மாத்திரை கோண்ட சீசா 1-க்கு விலை 1—4—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

உபயோகப்படுத்தும் விபரம் மருந்துடன் அனுப்பப்படும்.

☞ ஏஜண்டுகள் தேவை தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மருந்து கிடைக்குமிடம்:—

**பழனிவேல் பிள்ளை,**

சோல் ஏஜண்டு, பெரிய கடை வீதி, கோயமுத்தூர்.

## மின்சார ரசம்.

### எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமுமில்லை. எவ்வித பத்தியமுமில்லை. பாலர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும் பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.**

### மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.



இங்கிலீஷ் படிக்க அவலுடன் எதிர்ப்பார்த்திருந்த அன்பர்களே! என் நீங்கள் கவலைப்படுகிறீர்கள்!!

23000 ஜனங்களுக்கு ஆங்கிலம் விரைவில் கற்றுகொடுத்தது

7-ம் பதிப்பு] இப்புத்தகம் ஒன்றேதான்!!! [7-ம் பதிப்பு

7000-பக்கங்கள் கொண்ட முழு கலிகோ பயிண்டு புத்தகம் விலை ரூ. 2. ஸ்ரீராமர் சீதா திருக்கலியாண படமும், பட்டாபிஷேக ஆட்டோன் படமும் உள்ளது.

## "ஆங்கில ஆசான் அல்லது போதினி"

எமது ரிஜிஸ்டர்ட் "லேடி டிரேட் மார்க்கு" போட்டிருக்கும் புஸ்தகம் பார்த்து வாங்குங்கள்!

மோசம் போகாதீர்கள்.



தமிழ் தெரிந்தவர்கள் ஆங்கில பாஷையை ஆசிரியர் இல்லாமலே அதி சீக்கிரத்தில் பணச் செலவின்றி சுயமாகவும், சுலபமாகவும் கற்றுக்கொள்ளலாம். உலக அனுபவத்திற்கு வேண்டிய பல விவகாரங்களின் பதங்களைப் படிப்படியாக நூதன பாட முறைகளுடன் வெளிப்படுத்தியிருக்கிறது. கிராம முன்சிப், கர்ணம், கான்ஸ்டேபில்கள், கங்காணியர்கள், பட்லர்கள் முதலிய எல்லா தொழிலாளர்களுக்கும் மிகவும் முக்கியமானது.

23000-காப்பிகள் இது வரையில் செலவழிந்திருப்பதே இதன் பெருமையையும் இன்றியமையா உபயோகத்தையும் விளக்கிக்காட்டும். எல்லா ஊரிலும் எல்லா புத்தக ஷாப்பிலும் கிடைக்கும். எல்லா விடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

**தி. இராஜகோபால் முதலியார்,**
302, தங்கசாலைத் தெருவு, மதராஸ்.



பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

## மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!
வெயில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை



இனாம் இனாம்!!

## ரகஸ்ய ரத்னம்

அல்லது

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 222, மதரா


கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.